வைகாசி 1988
May



# பார்வை

PARVAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# New MARCHE LAKSHMI

புதிய நிர்வாகத்துடன் JEANTALON
சந்தைக்கு அருகாமையில் அமைந்துள்ள
NEW MARCHE LAKSHMI ஸ்தாபனத்தினர்
உங்கள் தேவை எங்கள் சேவை என்று இலங்கை,
இந்திய, கனேடிய, உணவுப் பொருட்களையும்

உங்களுக்குத் தேவையான எல்லாவித

- பலசரக்கு வகைகள்
- அன்ருட பாவனைப் பொருட்கள்
- காய்கறி வகைகள்

எல்லாவற்றையும் ஓரே இடத்தில் பெற்றுக்கொள்ள



**New MARCHE LAKSHMI**
7010 CASGRAIN, MONTREAL
270-8120
EAST & WEST INDIAN GROCERIES
TROPICAL FOODS, SPICES & FRESH MEAT
RETAIL AND WHOLE SALE.

எங்களிடம் பழைய, புதிய வீடியோ திரைப்பட கசட்டுகள், இம்போட்டப்பட்ட பியர், வைன், ஆகியவற்றையும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

மறந்துவிடாதீர்கள்! பொருட்களை மொத்தமாக கொள்வனவு செய்யும் பட்சத்தில் இலவச விநியோகம் செய்யப்படும்.




வாழ்க! வளர்க!
தமிழ்ப் புத்தாண்டு நன்னாளில்
இன்புற்று வாழ்க!

தமிழர் ஒளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தமிழர் ஒளி
THAMILAR OLLI

பார்வை

ஆசிரியர் :- செல்வம்
இணை ஆசிரியர் :- ஜெயரூபன்
வடிவமைப்பு :- ஸ்கந்தன்
யோகேந்திரன்



R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323

# குழந்தைகள்

அந்தச் சிறிய கைகள்
சின்னஞ் சிறு விரல்கள்.
அவற்றை அடிக்கக் கூடாது
அவை உடைந்துவிடும் அப்போது.

அந்தச் சிறிய கால்கள்
சிறிய கட்டை விரல்கள்.
அவற்றை மிதிக்கக் கூடாது
அவை நடமாடா அப்போது.

அந்தச் சின்னக் காதுகள்
மெல்லிய ஒலியையும் கேட்கும்.
அவற்றிடம் இரைச்சல் கூடாது
அவை செவிடாகிவிடும் அப்போது.

அந்தச் சிறிய வாய்கள்
எல்லாவற்றையும் பேசிவிடும்.
அவற்றை அடைக்கக் கூடாது
அவற்றிலிருந்து எதுவும் வராது அப்போது.

அந்தச் சிறிய தெளிவான கண்கள்
எதையும் பார்த்துப் புரிந்துகொள்ளும்.
அவற்றைக் கட்டிப்போடக் கூடாது
எதையுமே புரிந்துகொள்ளாது போய்விடும் அப்போது.

அந்தச் சிறிய உள்ளங்கள்
சுதந்திரமான வெள்ளை உள்ளங்கள்.
அவற்றைத் துன்புறுத்தலாகாது
அவை உடைந்துவிடும் அப்போது.

அந்தச் சிறிய முதுகெலும்பு
இன்னும் கண்களுக்குப் புலப்படாத ஒன்று.
அதை வளைக்கக் கூடாது
அது முறிந்துவிடும் அப்போது.

நிமிர்ந்த நேர்மையுள்ள மனிதர்கள்
ஓர் உன்னதக் குறிக்கோள்.
முதுகெலும்பில்லாத மனிதர்கள்
ஏற்கனவே நம்மிடையே ஏராளம்.

— பெட்டினா வெக்னெர் (Bettina Wegner).
(கிழக்கு ஜெர்மனி)
ஜெர்மன் மூலத்திலிருந்து தமிழில் : ஜி. கிருஷ்ணமூர்த்தி.




இது ஒரு தமிழர் ஒளி வெளியீடு
மே 1988 கண்-2 பார்வை- 2


காலம் பிந்தி என்றாலும் (பார்வையின்) புதுவருட வாழ்த்துக்கள்.

ஒவ்வொரு மாதமும் பார்வையை வெளியிடலாமோ என முயற்சிக்கின்றோம். இது எங்களை பொறுத்த விடயம் மாத்திரம் அல்ல. வாசகர்கள், படைப்பாளிகள், விளம்பரம் தந்து உதவும் வர்த்தகர்கள் சம்பந்தப்பட்டவை. இவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தமிழர் ஒளி மாதா மாதம் தொடர்ந்து பார்வையை பிரசுரிக்கும்.

மொன்றியல் கொன்கோடியா பல்கலை கழகத்தின் பேராசிரியராக இருக்கும் பேராசிரியர் சந்திரகாந்தன் அவர்கள் இம்மாத சஞ்சிகைக்கு ஆக்கம் ஒன்று தந்து உதவியிருக்கிறார். நன்றி. கல்விமான்களும், படைப்பு இலக்கியவாதிகளும் தங்களின் எழுத்துக்களினால் அகதிகளாய் இந்நாட்டில்வாழும் தமிழர்களை அரசியல் ரீதியாகவும், இலக்கிய ரீதியாகவும் வளர்த்து எடுக்க வேண்டுகிறோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறும் கையெழுத்து பத்திரிகை என்று ஒதுக்கிவிடாமல் ஊக்கமளிக்க வேண்டுமென்று வேண்டுகிறோம்.

ஈழத்தில் அறியப்பட்ட கவிஞரான திரு செழியன் அவர்கள் அண்மையில் இங்கு வந்து இருக்கிறார். அவரும் இம்மாத சஞ்சிகையில் எழுதி இருக்கிறார். கனடாவில் தமிழ் இலக்கிய படைப்பாளிகளின் முன்னணியில் இருக்கும் திரு. சேற்றார் விக்கிரமும் தொடர்ந்து பார்வைக்கு எழுதுவதாக ஒத்துகொண்டு இருக்கின்றார். இன்னும் பார்வைக்கு ஆக்கங்கள் தந்த அனைவருக்கும் எங்கள் நன்றிகள்.

## குழந்தைகள்.

எவ்வளவோ இழந்து விட்டோம். அகதிகளாக நாடுநாடாக அலைகின்றோம். இருந்தாலும் ஈழத் தமிழர் ஆகிய எங்களுக்கு இருக்கும் நம்பிக்கை எங்கள் குழந்தைகளே. எங்களின் இருப்பினை உறுதி செய்யும் வாரிசுகள் நாங்கள் பாசம் வைத்திருக்கும் எங்கள் தேசத்திலோ யுத்தத்தினால் பலகுழந்தைகளை இழந்து விட்டோம். இருக்கும்



சிறுவர்களும் பல கொடுமைகளினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். எதிர்காலம் எப்படி போகுமோ நம்பிக்கை ஒளி தெரியவில்லை.

இங்கே குடியேறி வாழும் நாங்கள் எங்கள் குழந்தைகளுக்கு எங்கள் தாயகத்தை நினைப்பூட்டுவோம்.

எங்கள் அன்னையர் எல்லாம் கன்னியர் ஆகி நிலவில் ஆடி இருந்தும் இந்நாடே என்று பாரதி சொன்னமாதிரி உனக்கு ஒரு தேசம் உண்டு. உலகின் மூத்த குடியின் வாரிசு செழுமைமிக்க மொழி உனக்கு உண்டு. இந்த நினைவுகளை இந்த சின்ன பூக்களின் மனத்தின் நினைப்பூட்டுவோம்.

பிரான்சு மொழியும் ஆங்கில மொழியும் கற்று கொடுப்பது எங்கள் குழந்தைகளுக்கு நாங்கள் பெற்றுக் கொடுக்கும் செல்வங்கள். ஆனால் அன் அவர்களுக்கு தாய்மொழியை கற்றுகொடுக்காவிட்டால் எங்கள் முகங்களை இழந்து போவோம். ஆகவே தமிழ் பேச, எழுத, வாசிக்க கற்றுகொடுக்கும்படி தமிழர் ஒளி அன்புடன் கேட்கிறது.

இப்படிக்கு
ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கொரு தமிழன்




வேதநாயகம் பிள்ளையின் தமிழில் முதல் நாவல் தொடங்கி ஈழத்து புராடரின் "இயேசு புராணம்" வரை தமிழுக்கு கிறீஸ்தவம் பெரும் பங்களிப்பு செய்திருக்கிறது. கனடாவில் வாழ்ந்து கொண்டு இவ்வியந்திர மயமான வாழ்விலும் இப்படியொரு இலக்கியம் படைத்ததிற்காக புத்தக ஆசிரியருக்கும் வெளியிட்டவர்களுக்கும் தமிழர் ஒளியின் வாழ்த்துக்கள்.

இயேசு புராணத்தின் இலக்கியதரம் பற்றிய விமர்சனத்தை தமிழ் அறிஞர்களுக்கு விட்டுவிடுகிறோம். ஆனால் கடல் கடக்கும் போதே மொழியையும் தேசத்தையும் மறந்த ஈழத்து பெரும்பான்மையானவர்களில் சிலர் விதிவிலக்கு இதில் இவர்களும் அடங்குகின்றனர். தமிழ் அறியாச்சீமையிலே அகதித் தமிழர்கள் மத்தியில் இப்புத்தகம் வெளியிட்ட இவர்களை எவ்வளவு போற்றினாலும் தகும்.

இங்கு இன்னொன்றையும் குறிப்பிட வேண்டும் ஈழத்து புராடரும் அவர் பிள்ளைகளும் தமிழ் அச்சுக் கலைக்கு மின்கணணியை அறிமுகப்படுத்தியதை.

எல்லோரும் புகழ்கின்றார்கள் என்று நாங்களும் புகழுகிறோம் அல்ல. உண்மையில் மெல்லத்தமிழ் மேற்கு மொழிகள் போல் வளரும்.

செல்வம்

<u>புத்தகம் கிடைக்கும் இடம்</u>

1183 பொறஸ்ஹட் டிரைவ்
மிசிஸ் சாகா
ஒன்ராறியோ
கனடா
L5C-1H6

தவிர்க்கமுடியாத காரணத்தினால் ந.ன.வின் மனவெளி தொடர்கதை பிரசுரிக்கமுடியாமைக்கு வருந்துகின்றோம். ஆ-ர்

தமிழில் இரண்டாயிரம் வருடத்து இலக்கியச் செல்வம் இருக்கிறது. இதில் தமிழர்கள் கட்டாயம் படிக்க வேண்டிய நூல்கள் என்று எத்தனையாவது தேர்ந்தெடுத்து நாம் தமிழர்களுக்கு விமர்சனையுடன் வகை அறிமுகம் செய்து வைத்திருக்கிறோமா? பிழைப்புக்காக மட்டும் தமிழ் இலக்கியத்தை நம் பயிற்சிக்கு இது போன்ற இலக்கிய மறுமலர்ச்சிக்கு வெளிக்கிறதே தவிர இலக்கியமாக அதை அனுபவித்துப் படிக்கும் எழுத்துச் செல்வமுடைய ஒரு இயக்கம் இல்லை. திருக்குறள் படிப்பவர்கள் இன்று அதில் நாம் என்னையனம் எப்படிப் பண்ணலாம் என்று பார்க்கிறார்களே தவிர - இலக்கியப் பூக்களும் பட்டு போகாதா? கம்பராமாயணமும் பட்டு போகாதா? மற்றும் எல்லாமும் பட்டு போகாதா?

க. நா. சுப்ரமண்யம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 29 ஜூலை 87

- சேரன் -

பெங்களூரில்
ராஜீவும் ஜே. ஆரும் சந்தித்துக் கொண்டபோது
தூற்றலாக மழை பெய்து கொண்டிருந்தது
வெளியே.

நந்தி மலைகளின் மேலாக
இறங்கிய காற்று
புல்வெளியின் மீது படர்ந்து தவழ்ந்தது

அன்றும்
அலைகள் ஓங்கிய
பாக்குநீரிணைக்கு அப்பால்
இருபதுபேர் இறந்து போனார்கள்

தானியங்கித் துப்பாக்கித் தொடர் வேட்டு;
கணநேரக் கொலைத் தீர்ப்பு;
எரிப்பு;
நெருப்புச் சாம்பல்
குழந்தைகளின் கனவுக்கு
இரத்தம்.



ஆக, இப்போதைய எண்ணிக்கை:
15,587.
கோப்பைகளிலிருந்த தேநீர்
திடீரென்று குருதியாக மாறியதை
உணராமல்
இரண்டு தலைவர்களும்
கண்களை மூடியபடிக்கே
காலம் சென்றார்கள்..

மாட்டு எலும்புகளிலிருந்து
வனையப்பட்ட சூரிகளும்
மண்டை யோட்டு முளைகளிலிருந்து
பிறந்த தட்டுக்களுமாக
உருமாற்றம் பெற்றது
சாப்பாட்டு மேசை.

எல்லாத் தொலைக்காட்சிக் கண்களும்
குருடாயின.

நமக்கு அப்பாற்பட்ட சமரசம்.

துயரமும் உறுதியும் வீரமும்
இதயம் ஊன் வாங்கி
ஆயிரமாயிரமாய் உயிர் வாங்கித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருதியில் எழுதிய சரித்திரத்தின் மீது
மை பூசுகிறது
வர்க்க ஞானம்.

உங்களின் சொல்லில் என்ன ?

நாமும் தான்;
பொதுவுடைமை இலட்சியத்தைக்
குழி தோண்டிப் புதைத்து விட்டு
புதை குழிமேல்
எந்த வகையான கல்லறை கட்டுவது
என்பதில் விவாதம் புரிந்து
அடிபட்டுப் பிளவுற்றுக் கொண்டு
நீர்த்தோம்.
(அதிகார வெறி வேறு !)

மூக்கின் வெறி மருந்தை
அடைத்துத் திணித்து விட்டுச்
சித்தம் குழம்பிச் சவாரி செய்தோம்.
மக்கள் மேல்...
விமர்சனத்தின் வீரியத்தை
விழுங்க முடியாமல்,
முகம் தெரியா இருளிலெல்லாம்
கொன்று புதைத்தோமே
நம்மவரை...



நில்லாமல் செல்கின்ற
வரலாற்று ஓட்டத்தின்
முன்னும் பறிவோம்

வா !
சரியான கணக்கெடுப்பு
அதன் பின்னர் புது எடுப்பு.

பா ர் வை எதிர்பார்க்கின்றது.

வாசகர்களிடம் இருந்து விமர்சனங்களையும், படைப்பாளிகளிடம் இருந்து கவிதை, சிறுகதை, கட்டுரை, இலக்கிய, அரசியல், ஆக்கங்களையும் எதிர்பார்க்கின்றது.

அனுப்ப வேண்டிய முகவரி.
பார்வை,

**THAMILAR OLLI ASSOCIATION INC.**
1396, St. Catherine (West)
Suites 226, 227 & 230
Montreal, Que.
CANADA
H3G 1P9
**Tel. (514) 866-0376**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து கதைகள் "செழியன்"

ஒரு மாளிகை. அங்கு அழகான ஒரு கிளிக்கூண்டு. அதில் ஒரு கிளி அடைக்கப்பட்டிருந்தது. கூண்டுக்குள் வெள்ளித்தட்டில் பால், பழம் வைக்கப்பட்டிருந்தது. கிளி இவற்றை பார்க்கவில்லை. தன் கூரிய நகங்களால் கூண்டை பிறாண்டியது. அலகினால் கூண்டின் கதவுகளை கொத்தி திறக்க முயற்சி செய்தது. சிறகுகளை சடசட என அடித்து வெளியேற முயன்றது.

இதை அந்த வீட்டில் இருந்த இரண்டு நாய்களும் பார்த்துக் கொண்டிருந்தன. நிலத்தில் முகம் வைத்து படுத்திருந்த ஒரு நாய் தலையை உயர்த்தி கிளியைப் பார்த்து கூறியது. "முட்டாள் பறவையே, என் எஜமானன் உனக்கு நேரம் தவறாமல் உண்ண உணவும், பாலும் தருகிறான். உன் கூண்டில் உள்ள அழுக்குகளை துப்பரவு செய்கிறான். உன் பாதுகாப்புக்காக அழகான கூண்டு இருக்கிறது. உன்னை பார்ப்பதற்கென என் எஜமானனின் கௌரவமான விருந்தாளிகள் வருகின்றனர். இத்தனை வசதிகளும், பெருமைகளும் உனக்கு இருந்தும் நீ முட்டாள் தனமான நடந்து கொள்கிறாய்".

நாய் கூறியதை கவனிக்காது தொடர்ந்தும் கூண்டின் கதவுகளை கிளி கொத்திக் கொண்டிருந்தது.

உடம்பை நெளித்துக் கொண்ட அடுத்த நாய் "துன்பத்தை நீயாக ஏன் தேடிக் கொள்கிறாய்? நீ விரும்பினால் உல்லாசமாக இந்தக் கூண்டுக்குள் வாழலாம்" என்றது.



பசியில் ரொட்டி கேட்டால்
பயணம் கை விட்ட கதை
நமக்குள்ளும் பல உண்டே?

யாரோடு நோக...?

கணக்கெடுக்க மறந்து
நம் காலத்தைக்
கோட்டை விட்டோம்...

தன்னுடைய வரலாற்றுச் சுவட்டெழுதி
தங்க முலாம் பூசும்
ஜே. ஆருக்கெதிராய் துணை புரிந்த
ரஜீவ் இராணுவத்துக்கு
திரைப்படத்தில் வாள் சுழற்றி
நிஜ வாழ்வில் துரும்பு பிடித்த
ராமச்சந்திர வாழ்த்து!

கை தட்ட வேண்டாம்..
சிரிக்க கூட என்ன இருக்கிறது?

சந்தோஷம் பிறந்ததென்று
சாவதற்கு நமக்கென்ன
இந்திரர்கள் வந்தா
சுகம் தந்து போனார்கள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் பரிசு போனாலும்
முயற்சிக்கும் நீ பாய்ந்து
ஆறுதல் பரிசு வாங்க
வெற்றி விளையாட்டா
போராட்டம்.

உடற்தேக வாய்ப்பாட்டில்
உல்லாசக் கனைக் கெடுத்து
நித்தியமும் கண் மயங்க
எவ்வெல்லோ இருந்தவர்கள்
இனித்தான் வருவார்கள்.

ஏவ்வாறு பெற்றது
இல்லை

சொல்லுங்கள் அடங்காத
என் சோகத்தை
சற்றே கேள்.

நீண்ட பயணத்திறங்கி விறுவிறுப்பாகவிட்டவ்
களைப்

இது செயப்பயணத்திற்கு தெம்பாக இடவ்
களுக்

விரும்பிய நாள் வேண்டாம்
விடுப்பிய நாள் வேண்டாம்



கிளி கோபமாக கூறியது. "உங்கள் எஜமானனின் அலங்காரப் பொருள் அல்ல நான். சுதந்திரமாக வான வெளியில் பறந்து திரிந்த என்னை கூண்டுக்குள் அடைத்து வைக்க முடியாது".

இரண்டு நாய்களும் சிரித்தன. "எங்களைப்பார் நாம் எவ்வளவு சுதந்திரமாக இந்த வீட்டில் இருக்கிறோம். அருமையான உறக்கம் சுவையான உணவு. இதைவிட வேறு என்ன தேவை?."

கிளி கூறியது "தன்னுடைய நலனுக்காக உங்கள் எஜமானன் உங்களுக்கு சலுகைகள் செய்கிறான். இந்த நாளில் சுவர்களை தாண்டி வெளியில் சென்றதற்காக உங்களை எஜமானன் தண்டித்ததை நான் பார்த்துக் கொண்டுதானே இருந்தேன்".

நாய்கள் இரண்டுக்கும் கோபம் வந்துவிட்டது. அவை உறுமின "ஏய் கிளியே எஜமானன் அடித்தால் நாம் என்ன திருப்பி அடிப்பது. எஜமானனுக்கும் எமக்கும் உள்ள முரண்பாடு நட்பு முரண்பாடு. இதை பேசித் தீர்க்க வேண்டும். உன்னைப் போல சுதந்திரம் என்று முட்டாள் தனமான முறையில் நடந்து கொள்ள நாம் மடையர்கள் அல்ல". என்று கூறிவிட்டு அந்த இடத்தை விட்டு சென்றன.

கிளி தொடர்ந்தும் கூண்டின் கதவுகளை கொத்தி திறப்பதற்கு முயன்று கொண்டு இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திகள்.

தமிழ்மக்களின் அமைதி வேண்டி 31 நாட்கள் உண்ணு நோன்பு இருந்து தியாகிகளின் வரிசையில் இடம் பெற்று விட்ட அன்னை பூபதியின் பூதவுடலுக்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் தமது இறுதி மரியாதையை செலுத்தினர். அன்னை பூபதியின் மரணசடங்குகள் அவர் முன்னர் கேட்டுக்கொண்டபடி நடைபெற்றது. இந்திய ராணுவத்தினர் இப்பகுதியில் ஆயுதங்களுடன் நடமாகின்ற போதிலும் எவ்வித அசம்பாவிதமும் நடைபெறவில்லை.

மக்கள் நல்வாழ்வு கருதி புலிகளுடன் ஒத்துழைக்க தயார் என்று E.P.R.L.F தெரிவித்துள்ளது. இதே வேளை இந்திய படைவசமுள்ள 14 P.L.O.T உறுப்பினர் சாகும்வரை உண்ணாவிரதம் ஆரம்பித்துள்ளனர். இது இவ்வாறு இருக்க இளைஞர்கள் கோண்டாவில் ஒன்று ஊர்க்காவல் படையினரின் துப்பாக்கிகளை அபகரித்து சென்றுள்ளது கடந்த ஞாயிறு மாலை ஐ.ஜீவராணி (வயது 23) என்ற இளம்பெண் ஒவருர் கட்டுக்கொல்லப்பட்பார். கடந்த ஞாயிறு காலை அப்பெண்ணை யாழ் பூங்கன்குளம் சந்தியில் வைத்து இனந்தெரியாதவர்களால் சுடப்பட்டார். அதே தினத்தன்று மாலை இனந்தெரியாத வாலிபர்கள் இவரை ஆஸ்பத்திரியில் படுக்கையில் வைத்துஇனந்தெரியாதவாலிபர்கள் தலையில் சுட்டுக் கொன்றுள்ளார்கள்

கிளிநொச்சி நகரை திடீரென சுற்றிவளைத்த இந்திய ராணுவம் சுமார் ஐயாயிரம் மக்களை " 7 மதுரைப்பிரிவு" இந்திய ராணுவ முகாமிற்கு அழைத்து சென்று சோதனை நடத்தியது. கடந்த 8ம் திகதி நண்பகல் ஒருமணியளவில் ஆரம்பமான இத்தேடுதல் சுமார் 2 மணித்தியாலங்கள் நீடித்தன. பரந்தன் முல்லைத்தீவு வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட இராணுவமுகாமில் இருந்துகொண்டு இந்தியராணுவம் இனி புதிய தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என தெரிய வருகின்றது.



வடக்கு கிழக்கு மாகாணங்களில் தாங்கள் மேற்கொண்டுவரும் சிவில் நிருவாக சீர்குலைப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து அமுலில் இருக்கும் என்றும் இதற்கு அரசாங்க ஊழியர்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது. தங்களது கோரிக்கைகளை உதாசீனம் செய்பவர்கள் மீதும், மீறுபவர்கள் மீதும் கடும்நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது இவ்விதமிருக்க இந்திய ராணுவமும், E.P.R.L.F எல்லா அலுவலகங்களையும் இயக்க எடுத்த முயற்சி தோல்வியடைந்துள்ளது. அண்மையில் நடைபெற்ற இந்திய மட்டக்களப்பு அரசாங்க அதிகாரிகள் சந்திப்பின்போது மட்டக்களப்பு அரசாங்க ஊழியர்கள் தமது இக்கட்டான நிலையைஎடுத்துக் கூறினர். மேலும் இச்சந்திப்பின்போது இந்திய இராணுவ அதிகாரியும் ம் தமது பாதுகாப்பை அளிப்பாத உறுதி கூறியுள்ளனர்.

இந்திய அமைதிப்படையினர் மனித உரிமைகளை மீறியுள்ளனர் என பிரதமர் ராஜீவுக்கு அமெரிக்க மருத்துவ விஞ்ஞானிகள் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர். மேலும் இக்கடிதத்தில் இருந்து நாம் அறிய வருவதாவது இந்தியபடை மனித உரிமைகளை மீறல்களை திகதி வாரியாக விமர்சித்து இதற்கு தக்க நடவடிக்கை எடுக்கும்படி இவ்விஞ்ஞானிகள் கோரியுள்ளனர்.

## சீனு

கடந்த சில வாரங்களுக்கு முன்பு சீனாவில் இருந்து 21 சீனர்கள் குடும்பத்துடன் வந்து MIRABAL விமான நிலையத்தில் அரசியல் புகலிடம் கோரியுள்ளனர். சீனர்கள் கனடாவில் வந்து அரசியல் புகலிடம் கோருவருவது இதுவே முதல்தடவையாகும். இவர்கள் HONG KONG கடவுட்சீட்டுடனே இங்கு வந்தார்கள். HONG KONG பிரஜைகளுக்கு கனடா வருவதற்கு "விசா" தேவையில்லை. இவர்களுக்கு தற்காலிக அகதி அனுமதி வழங்கப்பட்டு முறைப்படி விசாரிக்கப்படுவார்கள் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுந்தர ராமசாமியின் இலக்கிய குறிப்புகள்

தமிழ் இலக்கிய உலகில் மிகப் பிரபல்யமாகவும் மிகச் சர்ச்சைக்குரியதாகவும் இருக்கும் பெயர் திரு. சுந்தரராமசாமியினுடையது. குறிப்பாக தமிழில் முதல் தரமான நாவல் என்றழைக்கப்படும் "ஜே. ஜே. சில் குறிப்புகள் வெளிவந்ததும் தமிழில் சராசரி வாசகனுக்கும் இவர் பெயர் அறிமுகமானது.

தமிழ் நாவலையும் தமிழ் கவிதைகளையும் அடுத்த கட்டத்திற்கு - உன்னத நிலைக்கு மாற்ற வேண்டும் என்று இவர் தீவிரமாக போராடி வருகின்றார்.

தமிழ் பத்திரிகைகள் பற்றியும் இன்றைய தமிழ் இலக்கியங்கள் பற்றியும் குறிப்புகள் இவை........

> மனித மனத்தை மலினப் படுத்தக் கூடியதும், உன்னத விஷயங்களை தரம் தாழ்த்திக் கொச்சைப் படுத்தக் கூடியதும், எதிலும் மேலோட்டமான கிளர்ச்சியை மட்டுமே தூண்டக் கூடியதுமான அ வருக்குத் தகுந்த எழுத்துக்களையே தமிழ்ப் பத்திரிகைகள், ஒப்பிட்டுப் பகுத்துணர சந்தர்ப்பம் பெறாத தமிழ் வாசகர்களின் மூளைக்குள், வாரா வாரம் திணித்துக் கொண்டிருக்கின்றன.



சுந்தர ராமசாமி

தமிழ்ப் பத்திரிகை உலகிலோ, சுவையான எழுத்து இலக்கியத் தரமும் கொண்டிருந்தால நம் பிரபல பத்திரிகைகளால் அவை முழு மனதுடன் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பதற்கு தி. ஜானகிராமன், கி. ராஜநாராயணன் ஆகியோரின் எழுத்துக்கள் இன்றும் சிறு வட்டங்களுக்குள் சுற்றிச் சுழன்று கொண்டிருப்பதிலிருந்து தெரிய வரும். ஜானகிராமன், ராஜநாராயணன் ஆகிய இருவருமே தகழி சிவ சங்கரப் பிள்ளை, எம்.டி. வாசுதேவன் நாயர் ஆகியோரைவிடச் சுவையான எழுத்தாளர்தாம். வாசகர்களுக்கு சிரமம் தராத அசோகமித்திரன், சா. கந்தசாமி போன்றோர்களின் எழுத்துக்கள் கூட அவற்றின் இலக்கியத்தரம் காரணமாக தமிழ்ப் பத்திரிகைகளால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. ஒரு ஆரோக்கியமான கலாச் சாரத்தில் இவர்களைப் போன்ற எழுத்தாளர்கள்-பல இந்திய மொழிகளில் நிகழ்வது போலவே-லட்சக் கணக்கான வாசகர்களிடம் பத்திரிகைகளால் எடுத்துச் செல்லப்பட்டுக் கொண்டிருப்பார்கள். தமிழில் தரமான எழுத்தாளர்கள் எவரும் இன்று பத்திரிகைகள் மூலம் வாசகர்களை எட்ட முடிவதில்லை. இப்படிப் பார்க்கும் போது ஜெயகாந்தன் அன்று பத்திரிகைகள் மூலம் பெரும் வாசகத் தொடர்பு பெற்றதை ஒரு விதிவிலக்கான காரியம் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆங்கில மொழியில் வெளிவரும் இந்திய வார, மாத இதழ்களும் லாப நோக்கங்கள் கொண்டவைதாம். அவை தர்ம ஸ்தாபனங்களால் நடத்தப்படுபவை அல்ல. ஆனால் இன்றும் அவற்றில் அரசியல், சமூகம், கலாச்சாரம் சார்ந்த தரமான எழுத்துக்களைப் படிக்க முடிகிறது. இப் பத்திரிகைகளில் படிக்கக் கிடைக்கும் விஷயங்களின் பெரும் பங்கை, ஏறத்தாழ அதே தரத்தில், ஆங்கிலம் அறியாத ஒரு மலையாள வாசகனுக்கும் இன்று அவனது தாய் மொழியிலேயே படிக்கக் கிடைத்துக் கொண்டும் இருக்கிறது. இந்த அரிய வாய்ப்பை வெவ்வேறு தரங்களில் இந்தி, வங்காளி, கன்னட மொழி வாசகர்களும் பெற்று வருகிறார்கள் என்பதை அம் மொழி எழுத்தாளர்கள் மூலம் அறிய முடிந்தது. இந்தக் கரக்கைச் சார்ந்த எதுவும் ஆங்கிலம் அறியாத, தமிழ் வாசகனுக்கு படிக்கக் கிடைப்பதில்லை என்பது மட்டும் அல்ல; மனித மனத்தை மலினப்படுத்தக் கூடியதும், உன்னத விஷயங்களை தரம் தாழ்த்திக் கொச்சைப்படுத்தக் கூடியதும், எதிலும் மேலோட்டமான கிளர்ச்சியை மட்டுமே தூண்டக் கூடியதுமான அருவருக்கத் தகுந்த எழுத்துக்களையே தமிழ்ப் பத்திரிகைகள், ஒப்பிட்டுப் பகுத்துணர சந்தர்ப்பம் பெறாத தமிழ் வாசகர்களின் மூளைக்குள், வாரா வாரம் திணித்துக் கொண்டிருக்கின்றன. மனித மூளையில் சிறு சலனத்தை ஏற்படுத்தக் கூடிய விஷயங்கள் அனைத்தும் இங்கு முற்றாகப் புறக்கணிக்கப்படுகின்றன. பத்திரிகை தர்மங்களோ, சமூக அக்கறையோ அற்ற லாப நோக்கம் மட்டுமே இங்கு பத்திரிகைத் துறையை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது.

சில முக்கியமான நிகழ்வுகளை மலையாளப் பத்திரிகைகளும், அதற்கு முற்றிலும் மாறாக தமிழ்ப் பத்திரிகைகளும் எதிர்கொண்ட விதங்களை நினைவு கூர்ந்து, இவற்றின் தர வேற்றுமைகளை மேலும் நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். இந்திரா காந்தியின் படுகொலை ஒரு நூற்றாண்டு உலகச் சரித்திரத்தைக் கணக்கில் எடுத்துக் கொண்டாலுங்கூட மிக பயங்கரமான ஒரு நிகழ்வு ஆகும். இந்தப் படுகொலை பற்றியும் இதைத் தொடர்ந்து டில்லியில் நடந்த வன்முறைச் சம்பவங்கள் பற்றியும் மலையாளப் பத்திரிகைகள், ஒன்றையொன்று போட்டியிட்டுக்கொண்டு, ஆராய்ச்சித் தகவல்கள் நிறைந்த கட்டுரைகளை வெளியிட்டன. 'இந்தியா டுடே' போன்ற ஒரு ஆங்கிலப் பத்திரிகையின் கட்டுரைத் தரத்திற்கு இவை அமையவில்லை என்றாலுங்கூட, ஆங்கிலம் அறியாத மலையாள வாசகர்களுக்கு இக் கட்டுரைகள் ஒரு சரித்திர நிகழ்வின் நாடித் துடிப்புகளை துல்லியமாக உணர்த்தியிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. மலையாளப் பத்திரிகைகளைப் போலவே தமிழ்ப் பத்திரிகைகளும் அலுவலக வசதிகளும், பண பலமும் கொண்டவைதாம். பல தமிழ்ப் பத்திரிகைகள் மலையாளப் பத்திரிகைகளை விடவும் அதிக விற்பனை கொண்டவை என்பதால், இயற்கையாகவே, அதிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமானமும் கொண்டவை. இருப்பினும் இப் பத்திரிகைகள் இந்திரா காந்தியின் கொலை பற்றி பரபரப்பைத் தரும் சில குறிப்புகளையே வெளியிட்டன. அவை மிக மேலோட்டமானவை. ஒரு சரித்திர நிகழ்வை பகுத்து ஆராய்ந்து அவற்றிலிருந்து மறைக்கப்பட்ட உண்மைகளை வெளிக்கொணரும் நோக்கமே இங்கு பத்திரிகைகளுக்கு இல்லை.


நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி சந்திரசேகர் சென்னையைச் சார்ந்தவர். அவர் பரிசு பெற்றதும் அவரைப் பற்றியும் அவரது ஆராய்ச்சிகள் பற்றியும் ஒரு சில கட்டுரைகளை மலையாளப் பத்திரிகைகள் வெளியிட்டன. அவரது இளமைக்காலத்தைச் சார்ந்த பல அரிய புகைப்படங்களையும் வெளியிட்டன. அவரைச் சார்ந்த செய்திகளில் அதிகமும், அவரது குடும்பப் படங்களும் சென்னையில் இன்றும் வசித்து வரும் அவரது இளைய சகோதரரிடமிருந்து சேகரிக்கப் பட்டவை என்று அக் கட்டுரைகளில் குறிப்பிடப்பட்டிருந்தன. ஆனால் சென்னையிலிருந்தே வெளி வரும் தமிழ்ப் பத்திரிகைகள் எதுவும் இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. விஞ்ஞானி சந்திரசேகரின் மற்றொரு சகோதரரான புரசு பாலகிருஷ்ணன் ஒரு தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர். ருஷ்ய எழுத்தாளரான அந்தோன் சேகவ்வை முதன் முதலாக தமிழுக்கு அறிமுகப் படுத்தி ஒரு தரமான விமர்சன நூலையும் அவர் எழுதியுள்ளார். (தம் குடும்பத்தினருக்கு அந்தோன் சேகவ்வை முதலில் அறிமுகப்படுத்தியவர் சந்திரசேகர்) இந்தப் பின்னணியில் தமிழ்ப் பத்திரிகைகள் சந்திரசேகரைப் பற்றியும் அவரது ஆராய்ச்சி பற்றியும் எவ்வளவோ விஷயங்களை தமிழ் வாசகர்களுக்கு அளித்திருக்க முடியும்.

தத்துவ ஞானியான ஜே. கிருஷ்ணமூர்த்தி தமிழகத்தோடும்-விசேஷமாக சென்னை நகரத்தோடும்-மிக நீண்டதும் மிக நெருக்கமானதுமான உறவுகள் கொண்டவர். கடைசி வரையிலும் அடையாறுக்கு வந்து தனது வருடாந்திரச் சொற்பொழிவுகளை அங்கு நிகழ்த்த வேண்டும் என்பதில் கிருஷ்ணமூர்த்தி கொண்டிருந்த கவனம் மிக ஆழமானது. இதுபோன்ற உறவுகள் எதுவும் கிருஷ்ணமூர்த்திக்கும் மலையாளக் கலாச்சாரத்துக்கும் இடையே இல்லை. இருப்பினும் அவர் மறைந்ததும் 'கலாகௌமுதி' மேலட்டையில் அவரது வண்ணப்படத்தை வெளியிட்டு அவரது வெவ்வேறு முகங்களை விளக்கும் மூன்று கட்டுரைகளை ஒரே இதழில் வெளியிட்டது. இந்த பேரிழப்பை தமிழ்ப் பத்திரிகைகள் எதிர்கொண்ட விதம் வெட்கக் கேடானது. அவரைப் பற்றி காரியார்த்தமான விஷயங்களை அவை வெளியிடாதது மட்டும் அல்ல; அவரைச் சிறுமைப்படுத்துவது போன்ற துணுக்குகளையும் அவை வெளியிட்டன. ருக்மணி அருண்டேல், புல்லாங்குழல் மகாலிங்கம் ஆகியோரின் மறைவுகள் குறித்தும் மலையாளத்தில் குழந்தைப் பத்திரிகைகளில் வெளிவந்த குறிப்புகளுக்கு இணையாகக் கூட நம் தமிழ் பத்திரிகைகள் எவற்றிலும் வெளிவரவில்லை. ........(தொடரும்)

நான் மனிதனின் நிலை பற்றி அவநம்பிக்கை கொண்டவன் எனினும் மனிதனைக் குறித்து நம்பிக்கை கொண்டவன் என்று என்னைச் சொல்லிக் கொள்வேன்.

ஆல்பெர் காம்யு





# ஒரு நிலாக்கால நினைவும் நெடுமூச்சும்

— புதுவை இரத்தினதுரை

இந்த நிலாக் காலம்
எப்போதும் இப்படித்தான்.
எந்தவித மாற்றம் இல்லாமல் ...
அப்படியே;
இந்த நிலாக் காலம் எப்போதும் இப்படித்தான்.

முந்தி நிலா நாளில் ...
முற்றத்தில் கோடிட்டுக்
கிந்தி யடிப்போம்,
கிளித்தட்டு,
வாரோட்டம்
என்று களிப்போம். எப்போதும் விளையாட்டே.
இன்று அதை நினைக்க
இருபத்தைந் தாண்டுகளின்
முன்னர் நிலாக்கால முசுப்பாத்தி தெரிகிறது.

இன்றும் நிலவு.
இளமை நினைவுகளில்
நின்று, மனமேனோ நெடுமூச்சு விடுகிறது.
காலம் விரிந்ததுதான்,
கண்மூடித் திறப்பதற்குள்
ஞாலம் விரைந்து நடந்து பறக்குது தான்.
என்றாலும் அந்த இளம்காலம் தடம் பதித்து
நின்ற இடம்
என்னுள் நிலை கொண்டிருக்கிறது.

எங்கும் வயல் நிலத்தில் எழிலாய்ப் பயிரிருக்கும்.
பொங்கும் நிலா வொளியில்
பொற் கதிர்கள் அழகொளிரும்.
குளம் நிரம்பி வழியும்,
குறுமீன் தெறித் தோடும்,
பழம் சொரியும் ஆலமரம் பக்கத்தே தலையசைக்கும்.
ஆல மரத்தின்மேல் அழகுநிலா எழுந்து வரும்.
பாலைச் சொரிந்தபடி பவனிவரும் அந்த நிலா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிலாக் காலம்
எப்போதும் இப்படித் தான்,
எந்தவித மாற்றம் இல்லாமல் ...
அப்படியே.

இந்த நிலாக்காலம் எப்போதும் இப்படித்தான்,
இந்த நிலவினிலே இம்மியதும் மாற்ற மில்லை,
நாங்கள் தான் மாறி நாறிக் கிடக்கின்றோம்.
தூங்க முடியாமல் துவண்டுள்ளோம்.
வாய் திறந்து,
பேச முடியாது பேச்சிழந்து போய் விட்டோம்,
வீசும் பொருளாகி வீதியிலே கிடக்கின்றோம்,
யாரும் நிலா முகத்தை
ரசிக்கின்ற நிலையில்லை.
யாரும் வயல் வெளியில்
நடை பயிலும் நிலையில்லை.
அந்தக் குளம்கூட அழகிழந்து கிடக்கிறது,
அந்தக் குளத்தின் அருகிலுள்ள ஆலமரம்
அப்படியே பேச்சற்று, அசைவின்றித் தூங்கிறது.
எப்படித்தான் பேச்சுவரும்
என்பது போல்,
எல்லாமே.
தூக்கக் கலக்கத்தில் துவண்டு கிடக்கிறது.
ஏக்கத்தில் அந்த நிலா
எனைப் பார்ப்போர் யாருமிலர்
என்ற நினைப்பில் இருள்மேகத் திரைக்குள்ளே ...
சென்று மறைகிறது,
திரும்ப இனி எப்போதோ?
நல்ல நிலாக்கால நாளிற்தான்
தமிழர்கள்
எல்லா விழாவுக்கும் ஏற்பாடு செய்வார்கள்,
வல்லிபுரக் கோவில் ...
வற்றாப்பளை யம்மன் ...
நல்லூர்,
காரைநகர்,
நயினை நாகம்மை,
என்றே நாம் தெய்வ விழா
எடுப்பதுவும் நிலா நாளே.

இன்றெங்கும் கார்கள்
இல்லையிது அந்நாளில்
அங்கங்கு உள்ள அம்மனுக்கு விழாவென்றால்,
எங்கெங்கும் பரபரப்பு.
எவ்விடத்தும் நீர்ப் பந்தல்
தங்கி இளைப்பாறச் சத்திரங்கள்
துணையின்றி
நம்பி உலாவரலாம் யாருக்கும் பயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பொங்கும் நிலா நாளில்
போய்வரலாம் பயமில்லை
வண்டியிலே.. நாங்கள் வல்லிபுரக் கோவிலுக்குச்
சென்று வந்த நாளெல்லாம்
தெரியும்;
நினைவிருக்கு,
தம்பப்பா,
செவிட்டுச் சரவணையார்,
உலக்குளத்துச் சம்பரியான் இவர்களிடம்
சவாரி விடும் வண்டியுண்டு,
வண்டியிலே நாங்கள் வல்லிபுரக் கோயிலுக்குச்
சென்றுவந்த நாளெல்லாம்
தெரியும்; நினைவிருக்கு,
இன்றிவைகள் யாவும் இயலாத காரியங்கள்.
சன்னதிக்குக் கூடச் சாகத் துணிந்தவர்கள்
மட்டுந்தான் போக முடியும்.
மற்றவர்கள்
எட்ட இருந்தபடி இருந்தெழும்ப வேண்டியதே.
கோட்டை முனியப்பர் கோவிலினைக்
கண்ணாலே...
பார்த்தவரைப். பார்த்துப் பலகாலம் ஆகிவிட்ட
நேச்சரிலே
ஏன்தான் நிலா ஆசை விட்டிடலாம்.

நாங்கள் பிறந்த நிலம்,
நாம் மிதித்து நடந்த நிலம்,
தாங்கி மகிழ்ந்த நிலம்,
சுடுகாடாய்ப் போனதுவே,
பண்ணைக்குப் போய்வரவே பயமென்றால்...
எங்களது
மண்ணுக்கு வந்த மாரடைப்பை மாற்றுவதார்?.

அக்கிரமமெல்லாம் அணிவகுத்து நிற்கையிலே
பக்குவமாய் நாங்கள் படுத்திருப்ப தெப்படியோ?
ஆயுதங்கள் மட்டும் ஆளவந்த காரணத்தால்...
ஆயுதங்கள் இங்கும் அணிவகுத்து நிற்பதினால்...
காரோடும் வீதியெங்கும் கண்ணி வெடி,
அம்மனது,
தேரோடும் வீதியெல்லாம் தெருக் கொலைகள்.

ஆனாலோ ... இன்று
அவையெல்லாம் பழங்கதைகள்
இந்த நிலாக் காலம்
எப்போதும் இப்படித்தான்
எந்த விதமாற்றம் இல்லாமல்
அப்படியே ...
நாங்கள் தான் மாறி நாறிக் கிடக்கின்றோம்
தூங்க முடியாமல் துவண்டுள்ளோம்,

## சினிமா விமர்சனம் I



## THE LAST EMPEROR

சீனப் படமான இது தான் இன்று மொன்றியல் சினிமா அரங்குகளில் ஓடும் படங்களில் தரமானது. சீனாவில் 1908ம் ஆண்டிலிருந்து 1967 வரை நிகழ்ந்த மிகவும் மனதைத் தொடக்கூடிய நிகழ்ச்சியை அழகாகச் சொல்லி அனைவரையும் ஈர்த்து இருக்கிறார் இயக்குனர். PU-YI என்ற எட்டு வயது சிறுவனே கதாநாயகன். டைரக்டர், காமிரா, எடிட்டிங் அனைத்தும் சிறப்பாக இருக்கின்றது.

— ரசிகன் —



## சினிமா விமர்சனம் II




மழலை சிலம்பரசனுக்காக இப் படம் பலருக்குப் பிடித்திருந்தாலும் முழுப்படமும் வெறும் மசாலாவே.

— ரசிகன் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியமும் சமய-சமுதாய விழிப்புணர்வும்

ஏ. வே. வி. சந்திரகாந்தன்
பேராசிரியர்
கொன்கோடியா பல்கலைக்கழகம்
மொன்றியல்.

அண்மைக்கால இலக்கிய ஆக்கங்களில் அடிக்கடி எதிரொலிக்கும் "நவீன இலக்கியம்" "ஆக்க இலக்கியம்," "முற்போக்கு இலக்கியம்" ஆகிய பதங்கள் கடந்த ஒரு நூற்றாண்டுக்கு மேலாகத் தமிழ் இலக்கியப் பரப்பில் பரிணமித்துவரும், ஒரு புதிய இலக்கிய உணர்வை வெளிப்படுத்தி நிற்கும், சொற்றொடர்களாகும். இப்பதங்களின் உட்கருவை இனம் காட்டுதல், சமகால இலக்கிய ஆக்கங்களின் அடிப்படைக் குறிக்கோளையும் - நோக்கையும் கண்டு தெளிவதற்குப் பெரிதும் உதவும். தற்போது பெருமளவில் வழக்கிலுள்ள இலக்கிய வடிவங்களாகிய சிறுகதை, குறுநாவல், நாவல், கவிதை வசன கவிதை, நாடகம் மற்றும் விமர்சன இலக்கியங்கள் ஆகியனவற்றின் உள்ளியல்பையும் பொருளையும் அடையாளம் காண்பதனாலே, நாம் மேற்கூறிய பதங்களுக்கு, இவ்விலக்கிய வடிவங்கள் சார்பாகவோ அன்றேல் எதிராகவோ உள்ள என்பதை உணரலாம். அதாவது ஓர் இலக்கியப் படைப்பு "முற்போக்கு" வகையினைச் சார்ந்ததா இல்லையா என்பதனை எத்தகைய அளவுகோல் மதிப்பீடு செய்யலாம் என நாம் தெளிவுபடுத்திக் கொள்ளலாம்.

**சமுதாய நோக்கு:-**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைக்காலில் ஆரம்பித்து இருபதாம் நூற்றாண்டில் துரிதமான வளர்ச்சியும் வளமும் பெற்ற சில முற்போக்கு இலக்கியப் பண்புகளில் மிகவும் முதன்மையானதாகப் போற்றப்படுவது இலக்கியத்தின் சமூக-சமுதாய சார்பாகும். நவீன, முற்போக்கு இலக்கியத்தினதும் முனைப்பான கோட்பாடாகக் கொள்ளப்படுவது, இலக்கியம் சமுதாயம் பற்றிக் கொண்டிருக்கும் கருத்துக்களும், நிறைவான சமுதாய மாற்றத்திற்கு அவை காட்டும் வழிகளுமேயாகும். இவ்வடிப்படையிலேதான் இன்றைய இலக்கியப் படைப்புகள் முற்போக்கு வகையினைச் சார்ந்ததா? இல்லையா? என தரநிர்ணயம் செய்யப்படுகின்றன. இலக்கியத்தின் வரலாறு இலக்கியப் படைப்புகளின் காலவரன் முறைப்பட்ட அட்டவணை என்று கொள்ளாது; இலக்கியமும் வரலாறும் ஒன்றிணைந்த நிலையில் சமுதாயத்தின் பிரச்சினைகளை, அமைப்புக்களை, தத்துவார்த்தப் போக்குகளை யதார்த்தமாகப் பிரதிபலிக்கின்றபோது அவ்விலக்கியமானது, தான் சார்ந்திருக்கும் வரலாற்றின் வளர்ச்சிப் படிகளின் வெளிப்பாடாகின்றது. எனவே பேராசிரியர் கா. சிவத்தம்பி குறிப்பிடுவது போல ஒரு நாட்டின் அல்லது சமுதாயத்தின் வரலாற்றினை அதன் இலக்கிய வழி நின்று நோக்குவது இலக்கிய வரலாறாகின்றது. (தமிழ் இலக்கியத்தில் மதமும் மானுடமும், பக். 7)

**விழிப்புணர்வும் விமர்சனமும்:-**

சமுதாயத்தின் ஓர் அங்கம் என்ற அளவில் இலக்கியப் படைப்பாளி, அவன் சார்ந்திருக்கின்ற சமுதாயத்தின் மதிப்பீடுகளை, தத்துவங்களை, நம்பிக்கைகளை ஏதோ ஒரு அளவிலும் வகையிலும் தனது இலக்கிய ஆக்கத்தில் தெளித்துவிடுகின்றான். தொன்று தொட்டு தமிழ் கூறும் நல்லுலகம் பாராட்டிப் புகழ்ந்து வரும் தொல்சீர் இலக்கியங்கள் முதல் இன்றுவரை ஜனரஞ்சமாக பாராட்டுப் பெற்றுவரும் மக்கள் இலக்கியம் ஈறாக இக்கூற்று பொருந்தும் எனலாம். ஆயினும் கடந்த சில தசாப்தங்களாக அறிவியல் ரீதியில் மேலோங்கிவரும் "சமுதாய விழிப்புணர்வு," சமுதாய அமைப்பின் ஏனைய இயக்க அங்கங்களாகிய சமயம், அரசியல், பொருளாதாரம், கல்வி, கலாச்சாரம் ஆகியவற்றில் பெருமளவு மாற்றத்தைப் புகுத்தியிருக்கின்றது, எனவே தான் சமுதாயத்திலிருந்து ஒதுங்கிய நிலையில் இன்று படைக்கப்படும் இலக்கியங்கள் இறந்த இலக்கியங்களாகவும், சமுதாயத்தின் இயக்க நிலை உயிரோட்டத்தோடு இணைந்து செல்லும் இலக்கியம் வாழும் இலக்கியமாகவும் கொள்ளப்படுகின்றது. சமூகவியல் கோட்பாடுகளின் அடியாக எழுந்த நவீன இலக்கிய விமர்சனமே பின்னயதன் உயிர்நாடியாகக் கொள்ளப்படுகின்றதென்பது இங்கு குறிப்பிடத் தக்கது. இங்குதான் முற்போக்கு இலக்கியத்தின் அடிப்படையும் ஆதார சுருதியுமாக இருக்கின்ற "இலக்கிய விமர்சனமும்" அதனை அறிவியல்விஞ்ஞான நோக்கில் ஆக்கித்தரும் திறனாய்வாளர்களினது அளப்பரிய பங்களிப்பும் இனம் காட்டிப் போற்றப்படவேண்டியதாகின்றது.

நவீன இலக்கியவிமர்சனத்தில் பெருமளவு ஈடுபாடு கொண்டு அதனை வளம்படுத்தி வளர்த்தவர்களுள் தமிழகத்தில், சிதம்பர ரகுநாதன், வா. வானமாமலை, கே. முத்தையா, இ. க. சிவசங்கரன், ச. செந்தில்நாதன் போன்றோரும் இலங்கையில் க. கைலாசபதி, கா. சிவத்தம்பி இ. முருகையன் ஆகியோரும் தமது இலக்கிய விமர்சனம் வழியாக போற்றுதற்குரிய சமுதாயப்பணி புரிந்தவர்களாவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களது விமர்சனத்தின் முக்கியமான பண்புகள் சிலவற்றை ஈண்டு குறிப்பிடுதல் முற்போக்கு இலக்கியத்தின் நோக்கையும் போக்கையும் சரியாகப் புரிந்துகொள்ள உதவும் என எண்ணுகின்றேன்.

## பொதுப் பண்புகள் :-

மேலே நாம் குறிப்பிட்ட திறனாய்வாளர்களுக்கிடையில், அவர்களின் சிந்தனைத் தனித்துவத்தின் சார்பாக எழும் ஒருசில வேறுபாடுகள் இருக்கின்ற போதிலும் இவர்களது திறனாய்வு முறைகளில் பின்வரும் பொதுப் பண்புகளைக் கண்டுணரலாம்.

1. நவீன இலக்கியப்படைப்புகளை மாக்சியப் பொதுவுடமைத் தத்துவத்தின் ஒளியில் ஆய்ந்து இன்றைய இலக்கியத்திற்கும் சமுதாய வளர்ச்சிக்கும் மாற்றத்திற்கும் ஏதுவாயுமையும் தொடர்புகளை இனங்கண்டு முற்போக்குப் பாதையில் நவீன இலக்கியம் முன்னேறிச் செல்ல வேண்டுமென்ற ஆர்வத்துடன் செயற்படுதல்.
2. சமூகவியல், மானிடவியல், மெய்யியல் கோட்பாடுகளினதும் தத்துவங்களினதும் ஒளியில் விஞ்ஞான ரீதியிலான ஆய்வறிவு முறைகளைக் கையாண்டு, கலை இலக்கிய விமர்சன நோக்கினை வளர்த்தல்.
3. ஆய்வறிவு அணுகுமுறைகள் மரபு எதிர்ப்பு உணர்வு, புதியது புனையும் ஆர்வம், சமயச் சார்பின்மை ஆகியனவற்றை மேலோங்கி நிலைபெறச் செய்தல்.
4. இலக்கியப் படைப்புகள் சமுதாயத்தின் - வர்க்கப்பிளவுகள், வகுப்புவாத பேதமைகள், சாதி, இனம், நிறம் மொழி வேறுபாடுகளை ஒட்டிய பிரச்சினைகளை இனம் காட்டி அவற்றை மாற்றியமைக்க உதவவேண்டுமென்ற உறுதிப்பாடு.
5. வெறும் பொழுதுபோக்கிற்காகவோ அன்றேல் ரசனைக்காகவோ என்றல்லாது சமுதாய மாற்றத்திற்கான விழிப்புணர்வை ஏற்படுத்த இலக்கியம் வழிகாட்ட வேண்டுமென்ற ஆர்வம்.
6. தனி மனிதனின் அனுபவ உணர்வுகளாகிய காதல், வீரம், தோல்வி, விரக்தி, போராட்டம், முரண்பாடு, அச்சம், அவலம், அநீதி போன்றவற்றையும் பாலியல் சார்பான பிரச்சினைகளையும் மட்டுமே இலக்கியத்தின் பொருளாகக் கொள்ளாது தனி மனிதன் - சமூகம் என்ற ரீதியிலும் பொருள்முதல்வாத அடிப்படையிலும் இலக்கியத்தின் பொருள், இயங்குநிலை போன்றவற்றைக் கொள்ளுதல்.

நாம் மேலே குறிப்பிட்ட விமர்சன இலட்சியங்களின் அடிப்படையில் இவர்கள் செயற்பட்டு இவ்விலட்சியங்களை இலக்கியப் படைப்பாளிகள் வழியாக நடைமுறைப் படுத்துதலிலும் பெருமளவு வெற்றியும் கண்டார்கள். இங்ஙனம் தமிழகத்திலும் இலங்கையிலும் இன்று வளர்ந்துவரும் ஆக்க இலக்கியப் படைப்புக்களை ஆரோக்கியமான திசையில் ஆற்றுப்படுத்தி வளரச்செய்த பெருமை இவர்களையே சாருமென உறுதியுடன் கூறலாம். முற்போக்கு இலக்கியத்தின் முனைப்பான, முதன்மையான பண்பு அதன் "சமுதாயச்சார்பு" என நாம் முன்னர் குறிப்பிட்டோம். சமுதாய மாற்றத்திற்கு ஆதரவு தந்து அதனை நெறிப்படுத்தும் சக்திவாய்ந்த சாதனமாக இலக்கியம் கொள்ளப்படுதல் வெறும் தற்செயல் நிகழ்வு அல்ல என்றும் இன்றைய அறிவியல் துறைகளில் பலவற்றை ஆழமாக ஊடுருவி வரும் "சமூகவியல்" ஆய்வறிவின் தூலமான விளைவுகளே இலக்கியத்தின் மீது இத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தினவென்பதையும் இனி விரிவாக ஆய்வோம்.

## சமூகவியலும் இலக்கியமும் :

தனிமனிதன் - சமூகம் பற்றிய ஆய்வறிவுத் துறைகளுள் இன்று துரித வளர்ச்சி பெற்று, சமுதாயத்தை ஒட்டிய ஏனைய அறிவியல் துறைகளில் பெரும் செல்வாக்கினை ஏற்படுத்திவரும் அறிவியல் பகுதிகளுள் "சமூகவியல்" முதல் இடத்தினை வகிக்கின்றது. இதற்கான காரணிகளை ஆய்வதன் மூலம், நவீன இலக்கியத்தின் சமூக - சமுதாய சார்பினைத் தெளிவுபடுத்தலாம்.

வரலாற்றின் வளர்ச்சிப் படிகளில் நின்று கணிக்கும்போது கடந்த இருபது ஆண்டுகளில் விஞ்ஞானம், அறிவியல், தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சியும் முன்னேற்றமும், கடந்த இருபது நூற்றாண்டுகளிலும் மானுட வாழ்விலும், செயலாற்றலிலும் ஏற்பட்ட மாற்றங்களைவிடப் பன்மடங்கானவை என்பது அனைவராலும் இன்று ஏற்கப்படும் உண்மை. இவ்விஞ்ஞான - அறிவியல் நோக்கும், வளர்ச்சியும் கல்வியின் எல்லாத் துறைகளையும் நீக்கமற நிறைத்து வருவதனை நாளாந்த அனுபவத்தில் நாம் தொட்டுணருகின்றோம். இவ் வளர்ச்சியின் வெளிப்பாட்டினை இரண்டு முக்கிய நிலைகளில் தெளிவு படுத்துவோம். முதலில் விஞ்ஞானம் - கலை என்ற ஆய்வறிவுப் பகுதிகளுக்குள் இன்று பிரிவினைகளைவிட நெருங்கிய உறவு ஏற்படும் சாத்தியங்கள் பெருகுகின்றன. இரண்டாவதாக அறிவியலின் ஒருதுறை பல துறைகளின் மேல் செல்வாக்குக் கொள்ளும் நிலையும் இன்று துரிதமாக வளருகின்றது. இதை ஒரு உதாரணத்தால் விளக்கலாம். கலைப்பகுதியைச் சார்ந்த வரலாற்றியல், "தொல் பொருள் ஆய்வினால்" உந்தப்படுகிறது; ஆயினும் பின்னையது தருகின்ற உறுதிப்பாடு, இரசாயன பரிசோதனைகள் வழியாக நெறிப்படுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பெறுகின்றது. இதேவேளையில் தொல்பொருளாய்வின் கண்டுபிடிப்புகள், கணிப்புகள், முடிவுகள் தரவுகள் ஆகியன மானிடவியல் சமூகவியல், சமயவியல், கலாச்சாரவியல் போன்றவற்றில் கணிசமான அளவு மாற்றங்களைப் புகுத்துகின்றது. இன்று அறிவியலின் பல் துறைகளுக்குள் அடங்கும், ''ஒப்பியல் ஆய்வு'' இதனையே வெளிப்படுத்துகின்றது. அதாவது அறிவியலின் ஒரு துறை ஆழப்படுத்தப்பட வேண்டுமாயின் அது ஏனைய பல துறைகளை ஒட்டியே வளர்ந்தாகவேண்டும்; அன்றேல் அது பலவீனப்படும், ஒப்பியல் சமயம், சமூகவியல் சமயம், ஒப்பியல் இலக்கியம், ஒப்பியல் சட்டம், ஒப்பியல் கல்வி போன்ற துறைகளின் துரித வளர்ச்சி இந்த ஒன்றை மற்றொன்று வளப்படுத்தும், வளர்க்கும் மனநிலையையே காட்டுகின்றது. ஒரு துறையின் முடிவான கருத்துக்கள் இன்னொரு அறிவுத் துறைக்கு மேற்கோளாகவும் அன்றேல் எடுகோளாகவும் பயன்படுகின்றது. இதை வெறும் அறிவியல் பண்டமாற்றாகக் கொள்ளுதல் மிகவும் தவறான, கணிப்பாக அமைந்துவிடும்.

மனிதனைச் சார்ந்த அறிவியல் துறைகள் அனைத்தும் இன்று ஒன்றையொன்று வளர்த்தும், தாங்கியும், ஊக்கியும், உயர்த்தியும் வரும் நிலை ஓங்கி வருவது வெறும் மாமூலான அணுகுமுறையெனக் கொள்ளுதல் தவறானதாகும். சமூகவியற்றுறையின் அனைக டந்த வளர்ச்சிக்கு ஆதாரமாக அமைபவை மானிடவியல் ஒப்பியல் கலாச்சாரம், ஒப்பியல் சமயம், மெய்யியல் - உளவியல் போன்ற் துறைகளாகும்.

இதே பின்னணியிலேதான் சமயத்திற்கும் சமூகவியலுக்குமிடையிலான உறவு நுனித்து நோக்கப்படவேண்டும். மதம் என்பது ஆன்மீக தேவைகளைப் பூர்த்தி செய்ய அமைக்கப்பெற்ற ஒரு நிறுவனம் என்றும் பலதரப்பட்ட நம்பிக்கைகள், பக்தி முயற்சிகள், வழிபாட்டு அனுசாரங்கள் ஆகியவற்றின் தொகுப்பு என்றும் கருதிய காலம் மலைறந்து பதத்தின் சமுதாயச் சார்பு புதிய வேகத்துடன் இன்று முன்கொணரப் படுகின்றது. கிறிஸ்தவ மறையில் சகோதரத்துவம் - சமத்துவம் என்ற உரமும் நீருமிட்டு வளர்க்கப்படும் சமுதாய விழிப் புணர்வு - எத்தகைய காரணிகளால் உந்தப்படுகிறது என்பதனை இவ்விடத்தில் இனம் காட்டுவது மிகப் பொருத்தமானதாகும்.

## புதிய இறைஇயல் நோக்கு :—

தென் அமெரிக்காவில் ஆரம்பமாகி, ஆபிரிக்க நாடுகளில் எதிரொலித்து இன்று ஆசிய நாடுகளை அடைந்துள்ள ''விடுதலை இறைஇயல்'' (Libelation Theology) சம காலக் கிறிஸ்தவ சிந்தனைப் போக்குகளின் முன்னணியில் இடம் பெறுகின்றது. மனித உரிமைப் பிரச்சனைகள், வர்க்கப் பிளவுகள், அநீதியான சமுதாய





அமைப்புகள் ஆகியவற்றினால் ஒதுக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் நசுக்கப்பட்டும் வந்த மக்களின் கண்ணீராலும் குருதியினாலுமே இந்த இறைஇயல் எழுதப்பட்டது. கற்பனைகளையே 'நாணச் செய்யும்வகையில் அங்கு யதார்த்தப்பண்பு விஞ்சிநிற்கின்றது. மக்களின் பிரச்சினைகளை, கண்ணீரை— செந்நீரைப் பகைப் புலமாகக் கொண்டு எழுதப்பட்டமையினால் இவ் இறைஇயல் உயிரும் சதையும் நிறைந்ததாக வளர்ந்தது. இன்று இவ்விறையியல் இந்தியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் பெருமளவு செல்வாக்கினைப் பெற்றுள்ளது.

தொல்சீர் இறைஇயலின் அடிப்படை நோக்கையும் இயல்பையும் மரபறியமைக்கும் அளவிற்கு விடுதலை இறைஇயலின் செல்வாக்குப்பெருகிவருகின்றது. அவ்வப்போது இறைஇயல் சிந்தனைகளில ஏற்படும் பஞ்சத்தையும் வரட்சியையும் போக்கவும், சில தவறான, தப்பான போதனைகளைத் திருத்தி, மரபுவழிவந்த சிந்தனைகளை விரித்துரைப்பதுமே இதுகாலவரை கிறீஸ்தவ இறைஇயலின் தலையாய பணியாகவிருந்தது. இங்கு ஆக்கபூர்வமான புதிய சிந்தனைகளுக்கு அதிகஇடம் இருக்கவில்லை பழைய கோட்பாடுகளைப் புனருத்தாரணம் செய்வதும் பிரச்சனைகளுக்குத் தேவைநோக்கி நிவாரணம் வழங்குவதுமே இறைஇயலாளரின் சிறப்புப் பணியாகவமைந்தது.

பல நூற்றாண்டுகளாக மெய்யியல் பதங்களைக் கருவிகளாக்கி இறைஇயல் உருவாக்கப்பட்டது. இன்று சமூகவியல், உளவியல், பொருளாதாரம், அரசியல், இலக்கியம் போன்ற துறைகளில் பயன்படுத்தப்பெறும் பொதுச் சொற்கள் பல முற்றாக்கு இறைஇயலுடன் இரத்த உறவு கொண்டவையாகக் கொள்ளப்படுகின்றன.

மனித உரிமைப் பிரச்சினைகளை சமுதாய இன்னல்களை வர்க்க வேறுபாடுகளின் விபரீதங்களைத் தன் உட்கிடக்கையாகக் கொண்டமையாலேயே இவ்விதமான உயிரோட்டம் மிக்க இறைஇயல் வளர ஆரம்பித்தது. வேதாகம நூலின் ஒளியில் இவ்விறையியல் வளர்க்கப்பட்டமை இதன் பெருஞ் சிறப்புகளுள் ஒன்று.

சிந்தனைக்கு :-

அழகும், அன்பும், உண்மையும், இசையும் கலந்து வாழ்க்கையைப் பிரதிபலிப்பதே நல்ல கவிதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் அவதானிப்பு

கனடாவில் வாழும் தமிழ்மக்கள் பெரும்பாலோனர் முக்கியமாக அகதிகளாக வந்து அரசியல் புகலிடம் கோரிய தமிழர்கள் கடைசியில் தாம் நடந்து வந்த பாதையை மறந்து நடை மாறுவதை அவதானிக்க கூடியதாக இருக்கின்றது. " எமது இன்னல்கள் எம்முடனே" ஆனால் இன்னும் பெரும்பாலான தமிழர்கள் தாய் நாட்டில் இன்னல் பட்டுக்கொண்டு இருப்பது நாம் நன்கு அறிந்ததே.

நாம் இலங்கையை விட்டு புறப்படும்போது, முன்பு பட்ட இன்னல்கள், உயிருக்கு பயந்து ஓடி ஒதுங்கிய இடங்கள், உயிரை பணயம், வைத்து கடல் கடந்து நாட்டுக்கு நாடு எல்லை கடந்து உயிர் வாழும் நோக்கத்துடன் இருந்து வருகின்றோம். இதே பயணத்தை மேற்கொள்ளும் நோக்கத்தோடு பல தமிழர்கள் எமது தாய்நாட்டில் உள்ளதும் எமக்கு தெரியும்.

இங்கு வந்து எமது நாட்டிற்கு திரும்பி போக இயலாது என்று கூறி, (கனடா அரசாங்கத்திடம்) அரசியல் புகலிடம் கோருகிறோம். நிரந்தரமாக இருப்பதற்கு அரசாங்கத்தின் அனுமதி கிடைத்தவுடன் அடுத்த ஓரிருமாதத்திற்குள் திரும்பி தாய் நாட்டுக்கு(கொழும்பிற்கு) நேரடியாக செல்லுகிறார்கள் எம்மவர்கள்.

இது ஒல்லாந்து அரசாங்கத்தின் கவனத்திற்கும் வந்துள்ளது. இது இனிவர இருக்கும் அகதிகளின் சந்தர்ப்பத்தை பாதிக்கின்றது. ஒல்லாந்து அரசாங்கம் இலங்கையில் இனிப் பிரச்சனை இல்லை என்றுமுடிவுக்கு வந்துள்ளது. இதன் காரணமாக அரசாங்கமும் தமிழ் மக்களை நாடுகடத்த ஒழுங்குகள் செய்கின்றது. இந்த முடிவுக்கு வர கனடா அரசாங்கத்திற்கு எவ்வளவு நாள் ஆகும்? இதை எம்மவர்கள் சற்று சிந்திக்க வேண்டும்



தாய்நாட்டுக்கு திரும்பி செல்ல எல்லோருக்கும் ஆசை உண்டு. ஆனால் அதை இப்படி செய்யாமல் பல வழிகளில் செய்யலாம். இதற்கு எத்தனையோ வழிகள் உண்டு. இவ்வழிகளை நான் உங்களுக்கு விளக்கி கூற வேண்டிய அவசியம் இல்லை. காரணம் இவ்வழிகள் எல்லோரும் அறிந்ததே.

கடந்த மாதம் கனடா அரசாங்கம் குருக்கியரை திருப்பி அனுப்பியது. இம்மாதம் இரு " எல்சல்வடோர்" அகதிகளுக்கு நாடு கடத்தும் உத்தரவு வழங்க பட்டுள்ளது. இந்த வரிசையில் அடுத்ததாக நாம் உள்ளோம். நாம் அறியாமல் செய்யும் இச்சிறு பிழையினால் நம்மவர்களே பாதிக்கப்படுகின்றனர்.

அண்மையில் அமுலாக்கபட இருக்கும் (C - 55) சட்டம். எல்லையில் உள்ள IMMIGRATION அதிகாரிக்கு, ஒருவரை அகதியா இல்லையா என முடிவு செய்ய அதிகாரம் வழங்கப்பட உள்ளது. இச் சட்டம் அமுலுக்கு வந்தால் இனி வர இருக்கும் எம்மவர்கள் திருப்பி அனுப்பப்படுவதில் ஐயமில்லை.

ஆகவே தமிழ் மக்களாகிய நாங்கள் நான் என்று இல்லாமல் நாம் என்று வாழ கற்றுகொள்ள வேண்டும்.

" அகி "

---

இலக்கிய வரலாறு என்பது இலக்கியத்தின் வரலாறு மாத்திரம் அன்று அது இலக்கியமும் வரலாறும் இணைந்த ஒரு நிலையே

டொக்டர் கா சிவத்தம்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழம்பிய சமன்பாடு

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கைத்தமிழர் பிரச்சனை உலகத்தின் கவனத்தைக் கவரத் தொடங்கியபின், உலக மக்களின் அநுதாபத்தையும் ஆதரவையும் பெறத் தொடங்கியபின் அன்னை இந்திராவினதும் பாரத மக்களினதும் உதவிச் சமிச்சைகளைப் பெற்ற பின்னரும் இலங்கைத் தமிழர்களுக்கு விடிவு பிறக்கவில்லை. ஏன்?

பல கூறுகளாகவும், பல்வேறு குழுக்களாகவும் சித்தாந்தங்களாலும் வழி முறைகளாலும் வேறுபட்டுப் பிரிந்திருந்த தமிழ் இனம்தான் அதற்குக் காரணம்.

ஈழத்தமிழருக்குரிய உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க உதவ யாராவது முன்வந்தால் கூட அதன் பின் யாரிடம் பொறுப்பைக் கொடுப்பது என்ற பிரச்சனை எழ நேர்ந்தது.

உலக அரசியல் சிக்கலும் போட்டியும் மிகுந்துள்ள இக் காலகட்டத்தில் ஒரு பலமுள்ள நாட்டினது அல்லது சர்வதேச இயக்கத்தினது வெளிப்படையான அல்லது மறைமுகமான அன்பும் ஆதரவும் இல்லாத எந்தவொரு விடுதலைப் போராட்டமும் வெற்றியடைந்ததாக கூறப்படமுடியாது.

அன்னை இந்திராவின் மறைவின் பின் அத்தகைய ஒரு ஆதரவு எமக்குண்டா என்ற மருட்சி ஈழத்தமிழர் கட்கு ஏற்பட்டது. பாலைவனத்துப் பசுஞ்சோலை போல் தோன்றிய சில இணைப்பு நடவடிக்கைகளும் கானல் நீர்போல் மறைந்துவிட்டது.

இலங்கை, இந்திய, தமிழக முக்கோண அரசியல் சதுரங்கத்தில் இலங்கையில் ஜே. ஆர். இந்தியாவில் ராஜீவ், தமிழகத்தில் எம். ஜீ. ஆர்



சிறுகதை — சேந்தூரன் விக்கிரமன்

## மனதில் நிறைவு வேண்டாமா

பேரிரைச்சல் ஆரம்பமாகிவிட்டது. இன்னமும் விடியாத காலைப் பொழுதில் வாகன இரைச்சல் வாளைப்பிழக்க, அலாரம் அடிக்க முன்னரே நிறுத்திவிட்டு போர்வைக்குள் புதைந்து கொள்ளுகின்றேன். எனது கரங்கள் அவளைச் சுற்றிக்கொள்ள அவளும் மெல்ல நெருங்கி எனது அணைப்புக்காய் தானும் காத்திருப்பதை தெரியப்படுத்துகின்றாள். போர்வைக்குள் மறைந்து கிடந்த அவளின் நிர்வாண மேனியின் இதமான சூட்டில் இன்னமும் நின்றுபோகச்சொல்லி நேரத்திடம் தூதுபோகும் மனதுடன் என்னுடன் அவளை அணைத்து கொள்ளுகின்றேன். நீல விழிகள் மெல்லத் திறந்து என்னை எனக்குள் தேடும் தீட்சண்யத்துடன் பார்க்கின்ற அவளுக்கு எனது காலை வணக்கங்களைச் சொல்ல கழுவாத வாயுடன் அவள் தருகின்ற இனிய முத்தம் ஒன்று என்னுள் இறங்கிப்போகின்றது.

"லின்"னை நான் சந்தித்ததே ஒரு சுவாரஸ்யம் தான். "செல்லோறன்ஸ்" வீதியில் ஒரு தேனீர்க்கடையில் தனிமை தொட உட்கார்ந்திருந்த என்னை அணுகி ஹலோ நீங்கள் இலங்கையா? என்றபடி என்முன் உட்கார்ந்தாள். என்னை அறிமுகப்படுத்தி, தன்னை எனக்கு புரியப்படுத்தி உலகத்தில் அவள் கொண்ட பற்றுதலைப் பகிர்ந்து கொண்ட பொழுது எனக்குள் எழுந்த ஆத்ம அறிவுத்தாகத்தில் நான் எவ்வளவு ஏழை என்பதனை உணர்ந்து அவளுடன் ஒன்றிப்போகின்றேன். தொடர்ந்த மாலை நேரச்சந்திப்பில் எல்லாம் எங்களை நாங்களே வளர்த்துக் கொண்டோம். எனது மானசீக இசைக்காதலியின் மேல் அவளுக்கிருந்த பற்று எனக்கு அவள் மேல் அன்பை ஏற்படுத்தியது. " ரவி சங்கரையும், ஹரிப்பிரசாத் சரஸியாளை"யும் இன்னமும் நேரடியாகப் பார்க்க முடியாத ஓர் ஏழை இலங்கையனாகிப் போன நானும் இவர்களிடம் முறையாக இசை பயின்ற அவளும் ஒருவருக்குள் ஒருவராய் நட்புடன் சிலாகிக்கத் தொடங்கினோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவுகளைப் பகிர்ந்து கொண்ட பொழுதில் தான் எனக்குள் கேள்விகள் எழத்தொடங்கின. ஆனால் வின் மட்டும் எப்பவும் போலவே நடந்து கொண்டாள்; எனது தேசத்தில் பிறந்த எந்தப் பெண்ணும், கணவன்–மனைவி என்கின்ற உறவில் தான் பத்தினி என்கின்ற முத்திரையுடன் வாழ்வதாகச் சொல்லிக் கொள்ளலாம். உடல் சம்பந்தப்பட்ட ரீதியில் அவர்கள் தூய்மையானவர்கள் என்பதனை ஓரளவு நான் ஒப்புக்கொள்ளுகின்றேன். ஆனால் மனம் என்கின்ற அடிப்படை உணர்வு ரீதியில் எத்தனையோ மறுக்க முடியாத மாக அவர்களிடம் உண்டு என்பதனை என்னுட்டில் எந்தப் பெண்ணும் ஒத்துக்கொள்ளப் போவதில்லை என்பதும் எனக்குத் தெரியும். இவள் எல்லாவற்றிலும் வெளிச்சமானவள். இந்த நாட்டில் பிறந்து வளர்ந்தவள் என்பதனால் தானோ என்னவோ அவளது நிர்வாணம் போலவே மனதுமாய் சிந்திக்கத் தெரிகின்ற பக்குவத்துடன் வளர்ந்து விட்டாள்.

சில இரவுகளின் முன்னர் களைத்துப் போயிருந்த அவளைக் கேட்டேன்.

வின், நீயும் நானும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டுள்ளோம். நாம் திருமணம் செய்து கொண்டால் என்ன?

அவளது தலையசைப்பில் மறுப்பு இருந்தது!

பாலா, என்னைப் பொறுத்தவரை திருமணம் என்கின்றது போலி வேஷம். பார்; நீயோ நானோ பசிக்கிறது என்கிற போது வீட்டுக்குப் போக நினைக்கிறதில்லை; காரணம் நமக்கு நேரமில்லை, என்பதில்லை. வாழ்க்கை அப்படியாகி விட்டது. எங்கேயோ ஒரு கடையில் சாப்பிட்டு விடுகின்றோம். அதே போல என் மனிதஉணர்வுப் பசிக்கு இப்ப நீயும் நானும் பகிர்ந்து கொண்டதை கலியாணம் என்கின்ற வேலிக்குள் கொண்டுவர வேணும் என்கின்றாய்? தயவு செய்து இனி மேல் இப்படி எல்லாம் நினைக்காதே. அனால் உன்னை நான் விரும்புகின்றேன்.

புரிந்து கொள்ளமுடியாத ஆச்சரியமான உணர்வுகளை எனக்குள் எழுப்பி விட்டு அமைதியாக என் நெஞ்சில் விழிகளை மூடும் அவளை இறுக



என ஒரு அரசியல் சமநிலை தோன்றி ஒரு இழுபறி நிலை தோன்றியது.

தமிழ்மக்கள் ஒன்றுபட்டு ஒற்றுமையாக செயல்பட முடியாதநிலையில் ஏனைய இயக்கங்களை நிறுத்திவிட்டு ஒரு இயக்கம் தலை தூக்கியது. மற்றைய இயக்கங்களின் ஆதரவாளர்களுக்கு அது மனக்கசப்பை ஏற்படுத்தியபோதிலும் ஈழத்தமிழ் மக்கள் மத்தியில் ஒரு புத்துணர்ச்சியும், நம்பிக்கையும் மீண்டும் தோன்ற அது அடிகோலியது உண்மை. ஒரு ஒழுங்குபட்ட கிரமமான ஒரு போராட்டம் தொடங்கப்போவதற்கான அறிகுறிகள் தென்படத்தொடங்கின.

இந்நிலையில் இலங்கையின் ஆட்சிபீடம் விழித்துக்கொண்டது. இறுதி முயற்சியாக தன் முழுப்பலமனைத்தையும் செலுத்தி கடந்த மே மாதத்தில் மேற்கொண்ட தாக்குதலும் பலனளிக்காது போகவே சாதுரியத்துடன் நடந்து இந்திய ஒப்பந்தத்தை மேற்கொண்டது.

இவ்வொப்பந்தத்தின் மூலம் ஈழத்தில் மீண்டும் பல அமைப்புக்களின் போட்டிகளும் பொறுமைகளும் உருவாகுமென இலங்கை . எடுத்த கணக்கு பிழையாகவில்லை. தனக்கு மூக்குப்போனாலும் தன் எதிரிக்கு சகுனம் பிழைக்க வேண்டும் என்ற ரீதியில் அவை செயலாற்றும் என்ற ஜே.ஆரின் யூகம் பிழைக்கவில்லை. ஈழத்தமிழரின் போராட்டம் 1982க்கு முன்லிருந்த நிலைக்கு சென்று விட்டது. அத்துடன் இலங்கையரசே எதிர்பார்க்காத அளவுக்கு வெளிநாட்டு இராணுவம் அங்கு குவிந்து விட்டது,

இந்நிலையில் இலங்கை– இந்திய – தமிழக சமநிலை மீண்டும் குலைந்து விட்டது. தமிழக முதல்வர் எம்.ஜீ.ஆர் மறைந்ததையடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழக சமன்பாடு சிறிது முரண்படத்தொடங்கியது. இந்நிலையில் தமிழகத் தேர்தல் நடந்தால் சமநிலை முற்றாகக் குழம்பி நிர்ணயம் செய்யமுடியாத நிலை தோன்றலாம். மத்திய அரசு ஆளுனர் ஆட்சி மூலம் தேர்தலைத் தள்ளிப் போட்டு கால அவகாசம் பெற முயன்றாலும் இச்சமநிலை சீக்கிரம் குழம்பத்தான் செய்யும். அந் நிலை ஈழத்தமிழர்களுக்கு சாதகமாக அமைவது அன்றைய அவர்கள் ஒருமையிலேயே தங்கியுள்ளது.

— காசி —

மார்க்சீய சிந்தனை மரபில் மானுடம் என்பது மனிதனுக்குரிய கௌரவத்தை தன் வாழ்க்கைச் சூழலைத் தானே மாற்றியமைக்கும் திறனுடைய அவனது ஆற்றலை அந்த ஆற்றலை அவனுக்கு வளங்கவும்; வளர்க்கவும் வேண்டிய அற நன்னெறிப் பெறுமானங்களைப் பற்றியறிதலும் அவற்றின் தொழில் பாட்டை விதந்து கூறுதலுமாகும்.

டாக்டர். கா. சிவத்தம்பி.

இலக்கியம் என்பதன் மூலம் கட்சி இலக்கியத்தை நான் கருதவில்லை. கட்சி இலக்கியத்தை நான் அடியோடு வெறுக்கின்றேன். கலை கலைக்காக என்றவாதம் பிழையானது, ஆனால் அதைவிடப் பிழையானது. கலை கட்சிக்காக என்றவாதம். கலை மக்களுக்காக —தானும் கை தூக்குகின்றேன். ஆனால் மக்கள் என்பதை கட்சியாக மாற்றுவதை நான் அடியோடு எதிர்க்கின்றேன்: ............

மூ. தளையசிங்கம்

அழைத்துக் கொள்ளுகின்றேன்.

வின்னுக்கு குழந்தைகள் என்றால் கொள்ளைப் பிரியம். அழகான குழந்தைகளைக் கண்டு விட்டால் "பாலா பார் என்ன மாதிரிக் குட்டி"; எனக்கு கிள்ளவேணும் போல இருக்கு; என்று அடிக்கடி என் காதுகளுக்கிடையில் முணு முணுத்திருக்கிறாள். தான் குழந்தை பெற்றுக் கொண்டாலும் முலைப்பால் கொடுக்கமாட்டேன் என்று அவள் ஒருநாள் சொன்ன போது என் தாயின் ஞாபகம் தான் எனக்கு வந்தது. என்னை வளர்த்து மனிதனாக்க தன்னை வருத்திக் கொண்டஎன் தாயின் ஏழ்மைத் தாய்க் கோலம் என் மனதில் தோன்ற நான் வின்னை பார்த்தேன்.

பாலா, ஒரு குழந்தையைப் பெற்று அந்தக் குழந்தைக்கு என் முலைப்பாலைக் கொடுப்பது என்பது, என்னை நானே தியாகம் செய்கின்ற மாதிரி. குறிப்பாக உலகத்தில் உள்ள எல்லா ஆண்களுமே பெண்களின் மார்பின் அழகில் மயங்கித்தான் பெண்களுடன் வாழ நினைக்கின்றார்கள். சில வேளை நீ கூட என்னைப் பார்க்கிறப்போ என் மார்பையே ரசித்துப் பார்க்கிறதை நான் கவனித்திருக்கின்றேன். அதனால் என்னுடைய பிள்ளைக்காக என்னை நான் தியாகம் செய்யத் தயாரில்லை. ஏன் எனக்கு என் தாயார் தராத இந்த முலைப் பாலை நான் ஏன் எனது பிள்ளைக்கு கொடுக்க வேண்டும்.

எனக்குள் இறுகிப் போன இடியுடன் ஒரு குற்ற உணர்வும் சேர்ந்து கொள்ளுகின்றது. இவளுக்குள் ஏற்பட்டுள்ள ஏதோ ஒரு தாக்கம் இவளையும், இவளைச் சேர்ந்த சமுதாயத்தையும் எப்படிப் பிரித்து வைத்திருக்கின்றது என்பதை நினைக்கவே பயமாய் இருக்கின்றது.

இரு நாட்களாக கொட்டித் தீர்த்தது பனி. வெண்மையான பனியின் குவியலில் தொட்டு வரும் தென்றல் பட்டுக் குளிர்ந்துபோன மேனியுடன் வின் வீட்டை நோக்கிப் புறப்பட்டுப் போனேன். இரண்டு நாட்களாக அவள் எனது அறைக்கு வரவில்லை. வழமையான தொலைபேசி அழைப்பும் இல்லை. இன்னும் எதிர்பார்ப்பது வின் என்கின்ற நிலைமையில் அவள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறையைத் தட்டுகின்ற போதே உள்ளே இருந்து வருகின்ற தினக்குரலின் ஓசை என்னைத் தொட திறந்த கதவின் முன்னால் அவள் நின்றிருந்தாள்.

லின், என்ன நடந்தது? ஏன் போன் செய்யவில்லை? மௌன மான அவள் வார்த்தைகள், விழிகள் என்னுள் மேய விழுக்கள் தொங்கிப் போகின்றன.

பாலா, இரண்டு மாதமாய் நான் இப்படியே இருக்கின்றேன். எனக்கு குழந்தை பெற்றுக் கொள்ள வேண்டும் போல இல்லை. எனவே நேற்றுப் போய் கருவைக் கலைத்து விட்டு வந்தேன். அது தான் இன்றைக்கு வயிற்றுக்குள் நோகின்றது......

பார்க்கவே பாவமாய் இருந்தது. ஆனாலும் என் விதையாய் முளைத்து முகம் காணாமல் அவளால் உருக்குலைக்கப்பட்ட ஒரு பிள்ளையின் முன்னே கொலைகாரன் போல ஒரு குற்ற உணர்வும் சேர்ந்து கொள்ளுகின்றது. பாவம் லின் மிகவும் வாடிப் போயிருந்தாள். அவளையும் அறியாமல் அவள் எனக்குள் விதைத்திருந்த ஏதோ ஒன்று என் மனசெங்கணும் வியாபித்திருக்கின்றது. இதன் பெயர் காதல் அல்ல. புரிந்து கொண்ட ஒரு மனிதாபிமானத் தினதோ அல்லது ஆத்ம நேசத்தினதோ பிரதிநிதியான உறவாய் இருக்கலாம் இருக்கவும் . வேண்டும்.


கலியாண சந்தடி ஓய்ந்து விட்டது. வந்திருந்த நண்பர்கள் எல்லோரும் போய் விட்டனர். கடந்த 5 மணித்தியாலங்களுக்கு முன்னர் தான் இவளுக்கு நான் தாலி கட்டினேன். இன்னமும் மணக் கோலத்தில் சாந்தி நின்றிருக்கின்றாள். அவள் முகத்தில் தெரிகின்ற பய உணர்வு எனக்கும் மெல்லப் புரிய அவளைப் பார்த்து புன்னகைக்கின்றேன்.

என்னம்மா; பயமாய் இருக்கின்றதோ?

மெல்ல அசைகின்றது தலை. கவிழ்ந்த படியே முகம்.

பாவம்; இவள், என்னைத் தெரியாமல் என்னுடன் வாழ வந்தவள். இனிமேல்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைப் பிடிக்கிறதோ இல்லையோ வாழ்க்கை என்ற தொலை தூரப் பயணத்தில் என்னுடன் துணைக்கு வர வேண்டியவள். நிச்சயமாய் வின்னைப் போல் இருக்க முடியாது. அவளுக்குள் இருக்கின்ற தனி தன்னம்பிக்கை தானும் இல்லாமல், எதற்கெடுத்தாலும் என்னையே நம்பி இருக்கப்போகின்ற ஜீவன். இவளுக்கு கலை ஞானம் இருக்கிறதோ இல்லையோ எனக்குத் தெரியாது. அவளுக்கு அமெரிக்க நாட்டின் ஜனாதிபதி யார் என்பது தெரிகிறதோவும் தெரியாது. புரிந்து கொள்ள முன்னரேயே பட்டும் அவசரமாய் அம்மா பூட்டி விட்ட விலங்கு.

வெளிநாட்டில் இருந்து வந்துவிட்ட மகன்; திருமணச் சலசலப்பு இவைகள் எல்லாம் என் தாயாருக்கு இரண்டு வயது காலத்தை பின்னுக்கி கொடுத்திருக்க வேண்டும். கிழவி குடு குடு என்று ஓடித்திரிந்து கொண்டிருந்தாள். என் தாயின் திருப்திக்கான இந்தத் திருமணத்தில் எனது திருப்தி எவ்வளவு என்பது எனக்குப் புரியவே இல்லை.

இன்னமும் சாந்தி முகம் காட்டாமல் வெட்கப்பட்டுக் கொண்டிருக்க எனக்குள் ஏதோ மெல்ல கரிசல் கொட்டத் தொடங்கியது.

இரவின் பிற் பகுதியில் எனக்கு எல்லாமே வித்தியாசமாக இருந்தது. சாந்தி பாயின் ஓரத்தில் கண்ணை மூடியபடியே களைத்துப் போய் கருண்டிருந்தாள். அவளை இழுத்து என்னருகில் விடும்போது இதயத்தின் அடிப்புறத்தில் ஒரு நினைவு எட்டிப் பார்த்துப் போனது. மெல்ல கையைத் தூக்கி நேரம் பார்த்து கடிகார நேரத்தைக் கணக்குப் பார்க்கின்றேன்.

வின் இப்போது வேலைக்குப் போயிருப்பாள். நான் களைத்துப் போன இந்த இரவில் அவள் அங்கே தனிமையிலோ அல்லது துணையுடனோ தூங்கியிருக்கலாம். விடியலின் தழுவலில் வேலைக்கு ஓடியிருக்கலாம். தன்னை தானே இணைத்துக் கொண்டு வாழ்க்கையில் தாக்கிப் போகின்ற சுமைகளை இறக்கி வைக்காமல் மரணித்தும் போகலாம் . ஆனால் எனக்குள் அவள் என்றுமே நல்ல மனைவி? அல்லது நண்பி? அல்லது ஏதோ ஒன்று. நினைவுகள் கற்பிழக்கின்றன. நீண்டதொரு பெருமூச்சுப் புறப்படுகின்றது.



சாந்தியை இழுத்து என் நெஞ்சில் படுக்க விடுகின்றேன். வெளி வெளியே ?சாமச் சேவல்கள் கூவுகின்றன. யாரோ ஒரு கிழவி எங்கள் அறையின் வெளியே வாய் புலம்பிக் கொண்டிருக்கின்றாள்.

## நம்பிக்கை

துணைபிரிந்த குயில் ஒன்றின்
சோகம் போல
மெல்ல மெல்லக் கசிகிறது
ஆற்று வெள்ளம்.
காற்றாடும் நாணலிடை
மூச்சுத் திணறி
முக்குளிக்கும் வரால் மீன்கள்.
ஒரு கோடை காலத்து மாலைப்பொழுது அது.
என்னருகே
வெம்மணலில்
ஆலம் பழக்கோதும்
ஐந்தாறு சிறு வித்தும்
சாய்ந்து கிடக்கக் காண்கின்றேன்.
என்றாலும்
எங்கோ வெகு தொலைவில்
இனிய குரல் எடுத்து
மாரிதனைப் பாடுகின்றான்
வன்னிச்* சிறான் ஒருவன்.

— வ.ஐ.ச. ஜெயபாலன்

* வன்னி: வவுனியா, முல்லைத்தீவு உள்ளிட்ட தமிழ்ப் பிரதேசங்கள்




"எந்தக் கட்சிக் கூட்டமானாலும் சரி... இவர் குரல் அங்கே கட்டாயமா கேட்கும்!"
"கட்சிக்கு எல்லாம் அப்பாற்பட்டவரா?"
"இல்லே, சுண்டல் விற்பவர்!"

— அரகண்டநல்லூர் சாதிக்பாட்சா

56



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சிங்களத் தீவிரவாதிகளுக்கு ராணுவப் பயிற்சி..!

ஒரு புறம் ஈழத்தில் இந்தியப் படையோடு விடுதலைப்புலிகள் மோதிக் கொண்டிருக்க, இன்னொரு புறம் தமிழகத்தில் 'சும்மா' இருப்பதாகக் கூறிக்கொள்ளும் மற்றைய தமிழ் அமைப்புகள் சில, இந்தியாவுக்கு எதிராக 'அண்டர்கிரவுண்ட்' நடவடிக்கைகளை எடுத்துவருவது தெரியவந்திருக்கிறது.

இந்த அமைப்புகள் முன்னர் சிங்கள அரசுப் படைகளுக்கு எதிரான போராட்டத்துக்காகச் சேகரித்த முக்கிய ஆயுதங்களில் ஒரு பகுதியை இந்தியாவில் தனி நாடு கோரும் சீக்கியத் தீவிரவாதிகளுக்கு விற்று வருவதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

இதேசமயம் இடதுசாரிப் போக்குடைய ஈழத் தமிழர் போராளி அமைப்பு ஒன்று தென்னிலங்கைத் தீவிரவாதிகள் சிலருக்கு, இந்திய மண்ணிலேயே ராணுவப் பயிற்சி அளித்து வருகின்றது என்ற உண்மையும் வெளியாகியிருக்கிறது.

*பின்னணி*

ஈழத் தமிழர் போராளிகளிடையே பல அமைப்புகள் இருப்பதுபோல் தென்னிலங்கையில் இயங்கும் ஜே.வி.பி. எனப்படும் சிங்களத் தீவிரவாதிகள் அமைப்புகளிடையேயும் பல பிரிவுகள், குழுக்கள் இருக்கின்றன.

வலுமிக்க ஜே.வி.பி. அமைப்புக்குத் தலைமை வகிப்பவர் ரோகண விஜயவீரா என்ற கிளர்ச்சிக்காரர். 1971-ம் ஆண்டில் திருமதி சிரிமாவோவின் அப்போதைய சிங்கள அரசினால் முறியடிக்கப்பட்ட ஆயுதக் கிளர்ச்சிக்குத் தலைமை வகித்தவர்தான் இந்த விஜயவீரா.

பின்னர் ஜெயவர்த்தன அரசினால் பொது மன்னிப்பு அளிக்கப்பட்ட இந்தக் கிளர்ச்சிக்காரர்கள் சில ஆண்டு காலம் ஜனநாயக அரசியலில் ஈடுபட்டனர். ஆனால், 1983-ம் ஆண்டுக்குப் பின்னர் 'பழைய குருடி கதவைத் திறடி' என்ற கதையாக ஆயுதப் போராட்டம், வன்முறை என்று பழைய பல்லவியைப் பாடத் தொடங்கியது இந்த ஜே.வி.பி. அமைப்பு.

ஜே.வி.பி. அமைப்பு புனர்ஜென்மம் எடுத்தபோதுதான், அவ்வமைப்பு பல துண்டுகளாக உடைந்து தனித்தனியே 'வளர' ஆரம்பித்தன.

ரோகண விஜயவீரா ஒரு குழுவுக்குத் தலைமை தாங்க, 1971 கிளர்ச்சியில் விஜயவீராவின் முக்கிய தளபதியாகச் செயல்பட்டு வந்த லயனல் போபகே என்ற சிங்கள இளைஞர் மற்றொரு குழுவுக்குத் தம்மைத் தலைவராகப் பிரகடனப்படுத்திக் கொண்டார். இந்தக் குழுக்களைத் தவிர, வேறு சிறிய தீவிரவாதக் குழுக்கள் பலவும் தென்னிலங்கைச் சிங்களர் மத்தியிலே செயல்பட்டு வருகின்றன.

ஈழத் தமிழ்ப் போராட்டக் குழுக்கள் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காகத் தங்களுக்குள் எப்படி மோதிக் கொண்டனவோ அதுபோலவே சிங்களத் தீவிரவாதக் குழுக்களும் தென்னிலங்கையில் ஆங்காங்கே மோதிக் கொள்கின்றன.

கண்ணில்படும் எதிரணியைச் சேர்ந்த தீவிரவாதிகளைச் சுட்டுக் கொல்வதில் சிங்களத் தீவிரவாத அமைப்புகள் தயக்கம் கொள்வதேயில்லை.

ஓரளவு பலமிக்க விஜயவீரா, போபகே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழப் போராளிகள் இந்தியாவில் ஆயுத விற்பனை!

குழுக்களிடையேதான் அதிக அளவில் மோதல் நிகழ்ந்து வருவதாகத் தென்னிலங்கைச் செய்திகள் தெரிவிக்கின்றன. மிக அண்மையில்கூட போபகே குழுவினர் பலரை, விஜயவீரா அணியினர் வழிமடக்கிக் கடத்திச் சென்று சுட்டுக் கொன்றதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த இரு பிரிவுகளில் விஜயவீரா தலைமையிலான குழு, தமிழ்ப் போராளிகளுக்குத் தாம் எதிரானவர்கள் என்பதைப் பகிரங்கமாகப் பிரகடனப்படுத்தியிருக்கிறது. 'தமிழ்ப் போராளி அமைப்புகள் எதுவும் சிங்கள மக்களிடையே அரசியல் நோக்குடன் வரக்கூடாது. வந்தால் அவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்படும். அப்படி வரும் தமிழ்ப் போராளி அமைப்புகளுடன் கூட்டு அரசியல் நடத்தும் சிங்களக் கட்சியினரும் சுட்டுக் கொல்லப்படுவார்கள்!' — இப்படி இந்தக் குழு அறிவித்தது மட்டுமல்லாமல் அதன்படி செயல்படவும் ஆரம்பித்திருக்கிறது.

தமிழ் அமைப்புகளுடன் ஒன்றிணைந்து தேசிய ஒற்றுமைக்காகச் செயல்பட்டதற்காகவே நடிகரும் தென்னிலங்கைத் தலைவருமான விஜய குமாரணதுங்காவை இந்த அமைப்பு படுகொலை செய்தது.

குழுவினரின் பிரகடனம், மரண அடியாக விழுந்திருக்கிறது. தமிழ் அமைப்புகளை தென்னிலங்கைப் பக்கம் தலை வைத்துக்கூடப் படுக்கவிடக்கூடாது என்பதில் விஜயவீரா விடாப்பிடியாக இருக்கிறார்.

இந்த நிலையில்தான் 'எதிரிக்கு எதிரி நண்பன்' என்ற கூற்றுப்படி இவருக்கு எதிரான போபகே குழுவுடன் ஈழத் தமிழ்ப் போராளி அமைப்பு ஒன்று கூட்டு உருவாக்கியிருக்கிறது.

இதன்படி போபகே குழுவினர் சுமார் ஐம்பது பேருக்கு ராணுவப் பயிற்சியளிக்க இந்த அமைப்பு உடன்பட்டது. கேரள எல்லைப் பகுதியில் சிங்களத் தீவிரவாதிகளைச் சிறு சிறு குழுக்களாகப் பிரித்து இப்பயிற்சி வழங்கப்பட்டு வருவதாக நமக்கு ரகசியமாகச் செய்திகள் கிடைத்திருக்கின்றன.

கொழும்பில் இலங்கைப் படைகளின் பாதுகாப்புடன் தங்கியிருந்த தமிழ்ப் போராளிக் குழு ஒன்றின் முக்கிய தலைவர் ஒருவர் இப்பயிற்சிகளைக் கண்காணிப்பதற்காகத் தமிழகம் வந்திருக்கிறார் என்று சொல்லப்படுகிறது.

அதுமட்டுமின்றி போபகே குழுவினருக்கு ராணுவப் பயிற்சியளிக்கப்படுவதை இலங்கை

சந்தித்தபோது ராணுவப் பயிற்சி குறித்தும் ஆராயப்பட்டிருக்கலாம்.

இந்தச் சந்திப்பை ஏற்பாடு செய்தவர், முன்பு சென்னையில் இலங்கையின் துணைத் தூதுவராக இருந்த ஜெயக்கொடி என்று கூறப்படுகிறது. இவர் இந்திய விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்ற காரணத்தினால் — இந்திய அரசின் கோரிக்கைப்படி — 1987-ல் இலங்கைக்குத் திருப்பியழைக்கப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேசமயம் இடதுசாரிப் போக்குடைய ஈழத் தமிழர் போராளி அமைப்பு ஒன்று, சிக்கியத் தீவிரவாதிகளுக்குப் பத்து 'ஏ.கே.47' ரைஃபிள்களை விற்றதாகப் பாதுகாப்பு வட்டாரங்களுக்குத் தகவல் கிடைத்திருக்கின்றது. இதுகுறித்து விசாரணைகள் முடுக்கி விடப்பட்டிருக்கின்றன.

இந்தத் தகவலையடுத்து, தமிழகத்தில் தங்கியிருக்கும் ஈழத் தமிழ்ப் போராளிகள் அமைப்புகளிடமிருக்கும் ஆயுதங்களை முற்றாகத் 'துடைத்து' அள்ளும்படி மாநிலக் காவல்துறையினருக்கு உத்தரவிடப்பட்டிருப்பதாகவும் அறியவருகிறது.

தங்களிடையே ஒரு ஏ.கே. 47 ரைஃபிளை சுமார் மூவாயிரம் அல்லது

[illegible] அமைப்புகள் [illegible] வைத்திருக்கிறது.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் கையெழுத்தானதையடுத்து இலங்கையில் தமிழ்ப் போராளி அமைப்புகளின் ஆயுதச் சேகரிப்புகள் கட்டுப்படுத்தப்பட்டன. ஈழத்தில் ஆயுதப் பலத்தையும் அதேவேளையில் வடக்கு இலங்கையில் தமிழ் மக்களின் ஆதரவையும் இழந்து நின்ற பிளாட், ஈ.பி.ஆர்.எல்.எப். போன்ற அமைப்புகள், தாங்கள் வட இலங்கையில் காலூன்ற முடியாத நிலையில் இருப்பதை உணர்ந்து தென்னிலங்கைப் பக்கம் தமது போக்கைத் திருப்பின.

தெற்கிலுள்ள இடதுசாரி அமைப்புகளுடன் சேர்ந்து கூட்டு அமைப்பு ஒன்றை உருவாக்கிச் செயல்பட முயன்றுவரும் இந்த அமைப்புகளுக்கு விஜயவீரா

[illegible] குழுவினரால்தான் இப்போது தலைவலி. தென்னிலங்கைத் தீவிரவாதிகளிடையே உட்பூசலைத் தூண்டுவதன் மூலமே அவர்களை வலுவிழக்கச் செய்யமுடியும். இதற்காகவும், விஜயவீராவை வீழ்த்தவும் போபகே குழுவுக்கு ராணுவப் பயிற்சி வழங்குவது சரியானதே' — இப்படி இலங்கை அரசு வட்டாரங்கள் கருதுகின்றனவாம்.

ராணுவப் பயிற்சி வழங்கும் மேற்படி தமிழ்ப் போராளிகள் குழுவின் தலைவர், இலங்கை அதிபர் ஜெயவர்த்தனாவைக் கடந்த வாரம் கொழும்பில்

[illegible] போராளிகள், தற்போது சிங்கள மற்றும் சீக்கியத் தீவிரவாதிகளின் விற்பனைச் சந்தை கிடைத்திருப்பதால் அதன் விலையை எக்கச்சக்கமாக உயர்த்திவிட்டார்களாம். இப்போது ஒரு ஏ.கே. 47-ன் கள்ள மார்க்கெட் விலை ரூபாய் பன்னிரண்டாயிரத்திலிருந்து பதினைந்தாயிரம் ரூபாய்வரை போய்விட்டதாம்!

— நமது நிருபர்

ஜூனியர் விகடன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



HYMNE A LA LIBERTE
சுதந்திர தேவியின் துதி

Même si arraché de ma maison
Je suis jeté dans une noire prison,
Même si, ma fortune et ma position perdues
Je suis accusé et méprisé,
Même si d'innombrables malheurs surgissent et m'écrasent
O Liberté, jamais je n'oublierai de te vénérer.

Les hommes, sevrés de ta grâce souveraine,
Même très riches, même honorés et instruits
Même estimés et respectés
Ne seront que des cadavres chargés de joyaux
Et leur vie n'en sera que plus misérable.

O déesse, un pays non éclairé par tes rayons
Est-il digne d'être appelé une nation?
La vie peut-elle y circuler? l'intelligence s'y épanouir?
Une activite créatrice s'y développer?
Là, point d'œuvres d'art, point de chefs d'œuvre littéraires

Les pauvres misérables, sans ton ambroisie
Se consumeront en de longues maladies.
O mère, ceux que ta bonté ignore, se traîneront
Sans volonté aucune, sans juste ambition,
Aux derniers rangs, méprisés par la tourbe.
O mère, source de toute grandeur impérissable.

இன்று மகாகவி பாரதி
யையும் அவனது ஆக்
கங்களையும் பின்னோக்
கிப் பார்க்கும் பொழுது
இருபதாம் நூற்றாண்டுத்
தமிழ்ச் சமுதாயத்தின்
வாழ்க்கைக் கூறுகளில்
அவன் பார்வை பாயாத
எதுவுமே இல்லை என்று
கூறும் அளவுக்கு
அவனது எழுத்து மதிக்
கப்படுவதைக் காண்கிறோம்
அரசியல் பொருளியல்
மெய்யியல் சமுகவியல்
அழகியல் அறிவியல்
முதலிய துறைகள்
அனைத்தையும் ஏதோ
ஒருவகையிலும் அணுகி
ஆம் அவன் தனது கூரிய
பார்வைக்கு உட்படுத்தி
அவற்றின் ஒளியாலே
தனது சமூகத்தைப் பற்றி
யும் நாட்டைப் பற்றியும்
கருத்து தெரிவித்து
இருக்க காண்கின்றோம்

அமரர்
க. கைலாசபதி.


R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


7103 Drolet
Montréal, Québec
Canada H2S 2T4

MDT

Tél.: (514) 271-4077
495-4955


MDT

# MARCHE DROLET TRINCO ENR.
## ற்றிங்கோ

எம்மிடம்
இலங்கை,
இந்திய,
கனேடிய
உணவுப்
பொருட்கள்
அனைத்தும்
தரமாகவும்
மலிவாகவும்
பெற்றுக்
கொள்ளலாம்.

மற்றும் இலங்கை, இந்திய
கதைப் புத்தகங்கள்,
எக்கோ முறையில்
பதிவு செய்யப்பட்ட
ஒடியோ கசற்றுகள்
இத்துடன் இல்லங்களில்
நடைபெறும் மங்களகரமான
வைபவங்களுக்குத்
தேவையான
பொருட்களையும்,
வீடியோப் படக்
கசற்றுகளையும்
பெற்றுக் கொள்ள
சிறந்த இடம்

Moving: உங்களது தளபாடங்கள் பொருட்களை ஏற்றி இறக்குவதற்கும், உங்களது இடமாற்ற தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் இன்றே எங்களை நாடுங்கள்.




எங்களிடம் இலங்கை முறையில் தயாரிக்கப்பட்ட மிகத்தரமான வறுத்த மிளகாய்தூள், கோப்பித்தூள் விசேடமாக கிடைக்கும்.



# முகேஷ் ஜுவலர்ஸ்

தரம்மிகுந்த
இந்திய தங்க நகைக
ளுக்கும், நங்கையர்
நாடும் நவநாகரீக
தங்க - வைர - வெள்ளி
ஆபரணங்களுக்கும்

நம்பகரமான
ஒரே ஸ்தாபனம்

உங்கள் தேவைக்கேற்ப ஆபரணங்களை
அழகுபெறத் தயாரிப்பதற்கும் - புனரமைப்பதற்கும்
- இன்றே நாடுங்கள் -

620, கர்காட் வீதி
அறை 320
தொலைபேசி
861 3110

MUKESH
JEWELLER

620, Cathcart St., Suite 320
Tel : 861 - 3110


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org